# கலங்கரை

## சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்



தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்

திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை

# 2012

தி/பெருந்தெரு விக்நேஸ்வரா
மகா வித்தியாலயம்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

திருக்கோணமலையினிலே பல்கலை
ஈந்திடும் விக்நேஸ்வரமே
திருக்கோணமலையினிலே

திருதரும் கல்வியும் திகழ் ஒளி பரப்பிட
மாணவர்மாண்பும் உயர்ந்தே ஓங்கிட
ஒளி தரு நிலையமாய் பெரும்புகழ் ஈட்டிடும்
உருவினில் அமைந்த ஒளி தரும் கூடமாம்
திருக்கோணமலையினிலே

சிவப்பு நிறத்தில் செம்மையும் காட்டி
மஞ்சள் நிறத்தில் மங்களம் போற்றி
வெண்மை ஊட்டி தூய்மை கூட்டி
அன்பும் பண்பும் அறிவும் பெருக்கும்
திருக்கோணமலையினிலே

நால்வகைச் சமயமும் நயமுடன் கற்று
நற்றமிழ் அறிவையும் சிறப்புடன் பெற்று
நீதி கற்று நேர்மை ஏற்று
சேவையாற்றும் செந்தமிழ் கூடமாம்
திருக்கோணமலையினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Former Principal



**Mr.N.Rajanathan (SLPS I)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட வாசகம்

“அன்பும் அறனும் பண்பும் பெறுக.”

## நோக்கக்கூற்று.

“நவீன தொழில்நுட்ப உலகிற்கு முகம் கொடுக்கக்கூடிய அறிவும் அறனும் சிறந்த பண்பும் கொண்ட சமூகம்.”

## Vission

LOVABLE, RIGHTEOUS AND COURTEOUS SOCIETY TO FACE THE MODERN TECHNO LOGICAL WORLD.

## பணிக்கூற்று

“நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை அர்ப்பணிப்புடன் உருவாகுதல்.”

## Mission

DEDICATE TO BUILD UP A NOBLE SOCIETY THROUGH, MODERN EDUCATIONAL TECHNIQUES.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டுச் செய்தி

திருக்கோணமலையின் சிறந்த, ஊக்கமுள்ள, நேர்மையான அதிபர்கள் வரிசையில் முக்கிய ஒருவராக திகழும் திரு.நா.இராஜநாதன் அவர்களுக்கு பாராட்டுச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன்.

1979ம் ஆண்டிலிருந்து இன்று வரை நானும் இராஜநாதன் அவர்களும் நண்பர்களாக இருந்து வருகின்றோம். இராஜநாதனிடம் நான் கண்ட முக்கிய சிறப்பியல்பு ஒழுங்கு ஆகும். அவரின் உடை, பாவனை, நிர்வாகம், பாடசாலைப்பொருட்களைக் கையாளுதலில் ஒரு கைச்சுத்தமும் ஒழுங்கும் நேர்த்தியும் மேலோங்கி நிற்கும். எவ்விடயத்தையும் அப் பழுக்கில்லாமல் நேர்த்தியாகவும் சரியாகவும் செய்து முடிக்க வேண்டும் என்று உழைப்பவர்.

இவர் ஒரு சிறந்த கணித ஆசிரியர், சிறந்த அதிபர் மட்டுமல்ல சிறந்த மெக்கானிக்கும் கூட ஏன் சிறந்த பெயின்ரர். இவ்வாறு பல்வேறு கோணங்களில் இவரை அணுகலாம். இவர் வைத்திருப்பது ஒரு பழைய மொறிஸ் மைனர் கார் தான். ஆனால் இவரின் சொல்லைக் கேட்டும் கார் அது. அதனது திருத்தம், கையாளுகை காரணமாக இன்றும் சிறப்பாக ஓடிக் கொண்டிருக்கிறது. இது அவரது சிறப்பான ஒழுங்கினை எடுத்துக்காட்டுகின்றது.

இவரது அதிபர் வாழ்வில் பல சிறந்த ஆசிரியர்களை உருவாக்கியவர். இவரிடம் நிர்வாகம் பழகிய பலர் வேறு பாடசாலைகளின் அதிபர்களாக உள்ளனர். சிறந்த ஆசிரியர்களாக மிளிர்கின்றனர்.

சிறிது காலம் பின்னடைவை எதிர் நோக்கிய இப் பாடசாலையைத் தூக்கி நிறுத்தி நகரத்திலுள்ள பிரசித்தி பெற்ற பாடசாலைகளினால் ஏற்றுக்கொள்ளப்படாத ஏழை மாணவர்களை உள்வாங்கி சிறப்பான கல்வியை வழங்கி ஊக்குவித்தார்.

இவரின் எதிர்காலம் மிகவும் சிறப்பாக அமையும் என்பது எனது திடமான நம்பிக்கை அவரை கௌரவிக்க விரும்புபம் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

திரு.கி.முருகுப்பிள்ளை
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கல்விச் சமூக, வரலாற்றில் தனது பாதச் சுவடுகளை பதித்து ஓய்வுபெறும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய அதிபர் திரு. இராஜநாதன் சேர் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தி/திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது முதல் நியமனத்தைப் பெற்ற இவர், அங்கு எனது நற்குருவாக இருந்து நல்வழி காட்டிய பெருமகன். இளைப்பாறும் இத்தருணத்திலும் திரியாய் கிராமம் இவருடைய பெருமைகளை உச்சரித்துக்கொண்டிருக்குமளவிற்கு அன்னாரது ஆரம்பகாலச் செயற்பாடுகள் அமைந்திருந்தன. அங்கிருந்து இடமாற்றம் பெற்று திருமலை நகருக்கு இவர் வந்தபோது மாணவர்கள் அழுத அழுகை இன்றும் என் மனக்கண் முன் நிற்கிறது.

தி/கலைமகள் வித்தியாலய அதிபராக நீண்ட காலம் பணிபுரிந்த திரு.இராஜநாதன் சேர் அவர்களது பெருமையை பாடசாலையின் கட்டடங்கள் கூட பறைசாற்றும். நாட்டின் சூழலில் பிரச்சினைகள் நிறைந்த அந்தக் காலநிலையிலும் பாடசாலை முதல்வரே பாடசாலைக்கு முதல் வருபவராகவும், அந்தி வரை பாடசாலையில் நிற்பவராகவும் அன்புவழிபுரம் கிராமத்திற்கே ஒரு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார் என்பதனை அக்கிராம மக்கள் எடுத்தியம்பியதை பெருமையோடு கூற விரும்புகின்றேன்.

ஆசிரியராயிருந்த ஆரம்ப காலத்தில் இவரிடம் கண்ட சேவையில் பற்றுமிகுந்த மிதமிஞ்சிய ஈடுபாடு, தற்துணிவான முடிவு, துரித செயற்பாடு, அன்பான வார்த்தை, பண்பான நடத்தை, தன் அவதானத்தின் வெளிப்பாடாயமையும் செயல் போன்ற எண்ணிலடங்கா நற்குணங்கள் ஓய்வுபெறும் வேளையிலும் பல்கிப் பெருகி மிளிர்வதனை நான் ஆச்சரியத்துடன் நோக்குகின்றேன்.

01.01.1997 இல் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். பாடசாலை அமைப்பே புத்தொளி பெற்று பிரகாசிக்கத் தொடங்கியது. நகரத்தின் பிரதான பாடசாலைகளுள் ஒன்றாக தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் வளர்ச்சி கண்டது.

- நூலகம்
- செயற்பாட்டு அறை
- கணனிப் பிரிவு
- வர்த்தகப் பரிவு (உயர்தரம்)
- ஒன்றுகூடல் மண்டபம் உட்பட மூன்றுமாடிக் கட்டடங்கள் – 3 போன்ற மிகமுக்கிய அம்சங்கள் அன்னாரது அயராத உழைப்பினாலும், இடைவிடாத முயற்சியினாலும் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டனவாகும்.வசதி குறைந்த மாணவர்களும் மிக எளிதில் பாடசாலையில் சேரக்கூடிய வசதியை திரு. இராஜநாதன் சேர் அவர்கள் இப்பாடசாலைக்கு வழங்கியிருந்தார். அதனால் வசதி குறைந்த மாணவர்கள் பெரும்பான்மையாகக் கற்கின்றனர். எனினும் இப்பாடசாலை, கணிதப் போட்டிகள், விஞ்ஞானப்போட்டிகள், புத்தாக்கப்போட்டிகள், தமிழ்த்தினப்போட்டிகள் ஆங்கில தினப் போட்டிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல்வேறு போட்டிகளிலும் வருடாவருடம் தேசிய மட்டம் வரை சென்று வெற்றியீட்டி திருக்கோணமலை நகருக்கே பெருமைசேர்க்கும் பாடசாலையாக இன்று திகழ்கிறதென்றால் அதன் காரணகர்த்தா பெருமதிப்பிற்குரிய திரு.நா.இராஜநாதன் சேர் அவர்களே என்பதனைக் கூறிக்கொள்வதில் நாம் அனைவரும் பெருமைகொள்கின்றோம்.

நல் ஆசிரியனாகப் பணிபுரிந்ததனால் திரியாய்க்கிரமாமப் பாடசாலைச் சமூகத்திற்கும், அதிபராக இருந்து, அன்புவழிபுரம் கிராம, திருக்கோணமலை நகரப் பாடசாலைச் சமூகத்திற்கும், தமிழ் ஆசிரியர்சங்கம் மூலமாக ஆசிரிய சமூகத்திற்கும், கல்வித் திணைக்களத்தின் சார்பாக, திருக்கோணமலை மாவட்ட ஆலய உற்சவக் குழுவில் இருந்து, ஆலய உற்சவங்களின் சிறப்புக்கும் காரணமாய் அமைந்து, பல்வேறு துறைகளுக்கும் தன் அளப்பரிய சேவை புரிந்து இளைப்பாறும் திரு. இராஜநாதன் சேர் அவர்களது தன்னலமற்ற சேவைபற்றி கூறச் சந்தர்ப்பம் அளித்த் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய பாடசாலைச் சமூகத்திற்கு என் மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஓய்வுபெற்றாலும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் தங்கள் வழிகாட்டல் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, தன்னலமற்ற சேவை வழங்கிய தங்களுக்கும், உறுதுணையாயிருந்த தங்கள் குடும்பத்தாருக்கும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் சார்பில், பலசிறப்புடன் பல்லாண்டு வாழ்க வாழ்க என்ற வாழ்த்துக்களையும், மனம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதில் பேருவகைகொள்கிறேன்.

நன்றிகள் நன்றிகள் நன்றிகள்

க.விக்னராஜா
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRO FILE - MR. N. RAJANATHAN

1. Birth : 1951.08.28

2. Place : Trincomalee

3. Parents : Mr. Illaiyathambi Nagaraja
Mrs. Annapuranam Nagaraja

4. Education :
1. Primary - T/St' Xaviour V.
2. Junior Secondary - T/ R.K.M.Koneswara Hindu College.
3. Senior Secondary - B/ Hindu College
- J/ Manipai Hindu College

5. Career : Date of first Appointment : 15.10.1973

| | |
|---|---|
| 1. T/Thiriai Maha Vidyalayam | - 1973 - 1979 |
| 2. B/ Teacher's Training College (Maths Special Trained) | - 1979 - 1982 |
| 3. T/R.K.M.Koneswara Hindu College | - 1982 - 1984 |
| 4. In - Service Advisor | - 1984 - 1991 |
| 5. Principal of T/Kalaimahal Vidyalayam | - 1992 - 1996 |
| 6. Principal of T/ Vigneswara Maha V | - 1997 - 2011 |

6. Resource Person : Maths Instructor of Distanced Education.

7. Family : Wife - Mrs. Nirmala Rajanathan
In Service Advisor
Zonal Education Office.

Sons
1. Mas. Rajanathan Prithiviraj
Greenwich University
London.

2. Mas. Rajanathan Shishanthraj
A.C.C.A
London.

8. Social Work :
1. Former President of Srilanka Tamil Teacher's Association.
2. Treasurer of Karumari Kumpathumal Amman Temple.
3. Monitor and Counsellor of Swami Gangadarananda Childrens Home.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை

அகவை அறுபதைப் பூர்த்தி செய்து எமது தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திரு.நா.இராஜநாதன் அவர்கள் மாணவர் சமுகத்துக்கு ஒரு "கலங்கரை விளக்கு" ஆகும். தனது வாழ்நாளில் ஏறக்குறைய நான்கு தசாப்தங்கள் கல்விக்காக சேவையாற்றிய சேவையாளனாகும். திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்ல எந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் வந்தாலும் அவர்களை வரவேற்று ஏற்றுக்கொண்டு கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுத்த அதிபர்களில் திரு.நா.இராஜநாதனுக்கு நிகராக யாரும் இருக்க முடியாது.

எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களாகும். வசதி படைத்த மாணவர்கள் ஏனைய பாடசாலைகளில் எவ்வாறு அனுபவங்களைப் பெறுகின்றார்களோ அவற்றை எமது பாடசாலை மாணவர்களும் பெறவேண்டும் என்பதில் அதிக ஈடுபாட்டைக் கொண்டவராக முன்னாள் அதிபருடைய செயற்பாடுகள் அமைந்து இருந்தன.

வலய மட்டத்தினால் வழங்கப்படுகின்ற எந்த இணைப்பாடவிதான முயற்சிகளுக்கும் எமது பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற வேண்டும் என்பதில் ஆசிரியர்களை வழிப்படுத்தி மாலை நேரங்களில் சனி, ஞாயிறுகளில் முழுநேரமும் பாடசாலையில் தங்கி இருந்து மாணவர்களின் முன்னேற்றங்களுக்கு காரணமாக இருந்தவர் எமது முன்னாள் அதிபர் அவர்களாகும்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக வடகிழக்கில் நடந்த அசௌகரிகங்களால் மாணவர்கள் கல்வியில் மிகவும் பாதிக்கப்பட்ட போது எந்தவித பதிவுகளும் இல்லாமல் மாணவர்கள் திருகோணமலைக்கு வருகின்ற போதும் விக்னேஸ்வரா பாடசாலையில் சேர்ந்து படிக்கும் ஒரு சூழ்நிலையை அவர் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பல வருடங்கள் தலைவராக இருந்து ஆசிரியர்கள் எதிர்நோக்கிய பல்வேறு சவால்களுக்கும், பிரச்சனைகளுக்கும் பல்வேறு மட்டங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதியும் உருவாக்கப்பட்ட போது அதனுடன் இணைந்து கொண்டு எமது வறுமையான மாணவர்களின் துயர் துடைப்பதில் ஈடுபட்டிருந்தார்.

திருக்கோணேஸ்வரத்திருத்தலத்தின் கல்விப் பகுதித் திருவிழா சபையில் பல வருடங்கள் தலைவராக இருந்து, பாடசாலைகளையும் பயன்படுத்தி இறைபணியிலும் ஈடுபட்டு இருந்தார்.

அருள்மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் வருடாந்த தேர்த்திருவிழா உற்சவத்திற்கான அன்னதானத்துக்குரிய மரக்கறிகளை வெட்டும் பணியை தமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மூலம் செய்த கொடுத்திருந்தார்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் எவ்வேளையில் திருக்கோணமலைக்கு வந்தாலும் அவர்களுக்கான தங்குமிட ஒழுங்குகளைத் தேவையான போதெல்லாம் வழங்கி பாடசாலையை சமுகத்திற்கான ஒரு இடமாக பயன்பட வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்குள் ஆசிரியர்களை வைத்து நிர்வாக வேலைகளை செய்விப்பதில் வெற்றி கண்டதன் விளைவாக JICA செயல் திட்ட வலயமட்ட செயற்பாட்டில் பல வெற்றிகளைப் பெற முடிந்தது. பாடசாலையின் பௌதீக தோற்றத்தை அழகு மிக்கதாக மாற்றியமைப்பதில் அவர் காட்டிய ஆர்வத்தின் விளைவாகவே பாடசாலை வளரவும் மாற்றங்களுக்கு காரணமாக அமைந்திருந்தது.

எல்லாவற்றையும் விட ஒரு நல்ல அதிபர் தனது காலத்தில் மட்டும் அல்லாது அதன் பிற்பாடும் அப்பாடசாலை மென்மேலும் வளர வேண்டும் என்ற நல் நோக்கம் கொண்டவராக இருக்க வேண்டும் அந்த உயர் நோக்கமும் முகாமைத்துவ சிறப்பும் திரு. நா. இராஜநாதன் அவர்களிடம் இருந்ததை இங்கு நான் சுட்டிக்காட்ட வேண்டும். அந்த வகையில் அவர் தான் கடமையில் இருக்கின்ற போதே என்னை இப்பாடசாலைக்கு வரவழைத்து பொறுப்புக்களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக என்னிடம் தந்ததையும், ஓய்வு பெறுகின்றோம் என்ற எந்த ஒரு பதட்டமும் இல்லாது ஓய்வு பெற இருக்கும் திகதிக்கு முன்பாகவே முறையாக ஆயத்தங்களை செய்து அலுவலக அனுமதியோடு பாடசாலையை என்னிடம் ஒப்படைத்தமையை இப்போதும் ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன்.

அந்த வகையில் ஒரு கல்வியியலாளர் ஆக, தொழில்சங்கவாதியாக, பாடசாலைச் சமுகத்திற்கு நல்ல நண்பனாக, கல்வி அலுவலகத்துக்கு நல்ல ஓர் அதிபராக, ஆர்பாட்டமற்ற தமிழ்ப் பற்றாளராக பதவிக்காலத்தை நிறைவு செய்த திரு.நா.இராஜநாதன் அவர்களது வாழ்க்கை என் போன்றவர்களுக்கு சிறந்த ஓர் உதாரணமாகும். இப்பாடசாலைக்கு நான் பிரதி அதிபராக வருவதற்கு முன்னர் அதிபராக கடமையாற்றிய அனுபவம் இருந்தாலும் கூட திரு.நா.இராஜநாதன் அவர்களோடு கடமையாற்றிய ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் பல விடயங்களை நான் கற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

எனவே இன்றைய தினம் அவருக்கான சேவை நலன் பாராட்டுவிழாவினைத் தலைமை தாங்கி நடாத்துவதில் நான் பெருமை கொள்கின்றேன். தொடர்ந்தும் இதுவரையில் இருந்தது போன்று எமது சமூகத்திற்கு ஒரு கலங்கரை விளக்காக அவர் விளங்க வேண்டும் என வேண்டி முடிக்கின்றேன்.

திரு.சி.மதியழகன்
பாடசாலை அதிபர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் இதயத்திலிருந்து ஒரு சில வார்த்தைகள்

திரு நா. இராஜநாதன் அவர்கள் தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி தனது 60வது அகவுப் பூர்த்தியுடன் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். இந்த வகையில் அவரது சேவையை நினைவு கூறுவது பொருத்தமானதொன்றாகும்.

திரு.நா.இராஜநாதன் அவர்கள் ஆசிரியராக, ஆசிரியர் ஆலோசகராக, அதிபராக 38 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார். என்பதுடன் தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அவரது சேவைகள் எண்ணற்றவை என்பதுடன் அவரது சேவைக்காலம் ஒரு பொற்காலம் என்றே கூறவேண்டும் மேலும் வறிய மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்கைத்தர மேம்பாட்டிற்காக உள்நாட்டு நண்பர்களிடமும் பெருமளவிலான பணம் மற்றும் பொருள் உதவிகளை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுத்த பெருமையும் இவரைச்சாரும். இன, மத, அந்தஸ்து பேதமின்றி சகல மாணவர்களுடனும், பெற்றாருடனும், ஆசிரியருடனும் இயல்பாகப் பழகியதுடன் சகல தரப்பினரையும் ஐக்கியப்படுத்தி ஆரோக்கியமான ஒழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதில் வெற்றியும் கண்டுள்ளார் என்றே கூறவேண்டும்.


மரம் நடுகையை மாணவர்களுக்கு அறியப்படுத்தி பாடசாலைச் சூழலை அழகாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றியமைத்தமை இவரது சிறப்பம்சமாகும். மேலும் இவரது தோற்றம், சீருடை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும். ஒரு விடயம் திரு.நா.இராஜநாதன் அவர்கள் நேர்மை, நேரம்தவறாமை, கண்ணியம், தன்னடக்கம், தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் தீர்க்கமான முடிவெடுக்கும் ஆற்றல், துணிவு, போன்ற உயரிய இவரது குணங்கள் நல்ல தலைமைத்துவத்திற்கு மட்டுமல்ல சிறந்த நிர்வாகியாகவும், சிறந்த அதிபராகவும் சேவையாற்றினார் என்பது மறுப்பதற்கில்லை.

திரு.நா.இராஜநாதன் அவர்களது ஓய்வுகால வாழ்க்கை நிம்மதியும், மகிழ்ச்சியும், ஆரோக்கியமும் நிறைந்ததாய் அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

திருமதி.இ.முரளிதரன்
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Principal




**Mr.S.Mathiyalagan (SLPS)**
**B.A, Dip.in.Edu.(Merit), Med**

# Deputy Principal



**Mrs.I.M.Muraleetharan (SLPS II)**
**B.Com, Dip.in.Edu, Med**

noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/விக்நேஸ்வர மகா வித்தியாலய ஆசிரியர் மாணவர்
## 28.08.2011 இல் ஓய்வு பெறும் அதிபர்
## திருவாளர். நாகராஜா இராஜநாதன்
## அவர்களின் பிரியாவிடையில் வரைந்து வழங்கிய

# வாழ்த்துமடல்.

விநாயகன் - தலைக்குமேல் தலைமை இல்லான்
விக்கினம் தீர்க்கும் ஈஸ்வரன் அவனே
இந்துக்கள் முதல் தெய்வம் கணபதி அறிவோம்
வந்தனைக்குரிய விநாயகன் பெயர் கொண்ட
விக்நேஸ்வர வித்தியாலயத்தில் தவப்பயன் அதனால்
வந்தமர்ந்த அதிபர் எம் இராஜநாதன் என்போம்
தொண்ணூற்றேழில் பதவியைக் கொண்டு
கண்டவர் போற்ற பதினான்காண்டு
கண் எனத்தகும் கல்விப் பயிரதை
எண்ணரும் விதத்தில் செழித்திடச் செய்தார்
என்றும் அவர் புகழ் வானவாவ வாழ்த்துகின்றோம்

தோற்றத்திலழகு - தொண்டிலும் அழகு
வேற்றுமையில்லா வெண்மையின் அழகு
சாற்றிடின் எங்கள் கல்லூரிக் கழகு
ஆற்றிய சேவையால் அமைந்ததே அழகு
சிரித்த முகத்திலும் சிவந்த சினத்திலும்
வரித்ததெல்லாம் கல்லூரி உயர்வே!
இராஜநாதன் அதிபர் என்கையில்
இராஜசேவையும் தலைசாய்த்ததங்கே!
எடுத்த கருமம் உயிர் எனக் கொண்டு
தடுத்தவை எவையும் துச்சமாய் மதித்து
மாணவர் உயர்வில் மனங்கொண்ட உழைப்பு
காணவைத்தது பல பல சாதனை படைத்திட்ட
சாணக்கியனாம் அவரை பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்

மாதிரிப் பாடசாலையாய் மலர்ந்தது - விக்நேஸ்வரா
ஆதிகாரணம் அதிபர் நீங்களே!
கல்லூரிச் சூழல் கவின் பெறமலர்ந்தது
நல்லியல் கலைகளில் நாட்டம் பிறந்தது
கட்டுப்பாட்டுடன் ஒழுக்கமும் பேணி
திட்டமிட்டுச் செயற்பட பெருமையால்
"ஜெக்கா" என்னும் செயல் மிகுதிட்டம்
ஜெயமாய் நிறைவுறத் தந்தனர் உன்வசம்!
தலைநிமிர்ந்தோம் அதனால்
புதுமைகள் படைத்திட்ட
புதல்வனை எல்லாம் பெற வாழ்த்துகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பெயர் கேட்டு மாணவர்அமைவார்
அவர் துயர் எதுவும் அமைதியாய் கேட்டு
மேவும் வகையில் முன்னின்று உதவிடும்
மேதகு பண்பால் எம் மனமெல்லாம் வென்றீர்
பாடசாலை ஆசிரியர் மாணவர்
நாடியே நின்ற நலன் விரும்பிகளும்
ஓர் குடும்பமாய் ஒருங்கிணைந்ததனால்
சார்ந்தன வெற்றிகள்! சாய்ந்தன தடைகள்
பாடசாலை மட்டத் தலைவராய் அன்றி
நாடளாவிய ஆசிரியர் சங்கத்தின்
செயல்மிகு தலைவராய் செம்மையாய் சேவை
அயர்வின்றிப் புரிந்தீர்! ஆளுமை கண்டோம்!
தலைமைப் பீடங்களில் சீர் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

கணித ஆசானாய் உம் பணி தொடங்கி
அணி பெற ஆலோசகர் பதவியில் நின்று
உண்மை உழைப்பால் கலைமகள் வித்தியாலய
கண்ணியம் மிக்க அதிபர் பெயர் கொண்டீர்
மங்காப் புகழுடனே வாழ்ந்திட்டீர்
மனமுவந்து மங்களம் பெருக வாழ்த்துகின்றோம்

அறுபதாம் வயதில் அரசசேவையில்
உறு பயன் முடிப்பார் உண்மையிதில்லை
உறுதிமிக்க உங்கள் உழைப்பை
மறுபதிலின்றி மனமார வேண்டினோம்
மக்கள் சேவை தொடரவே மனமாற வாழ்த்துகிறோம்

பிரியாவிடை காணும் இந்த நாளில்
உரிய முறையில் எம் வாழ்த்தைத் தந்து
மனைவி புதல்வர் உறவுடன் இணைந்து
அனைத்தும் பெற்றிட (இறைதாள் பணிந்தோம்) வாழ்த்துதல் கடனே!

## திருமலை மண்ணில் தங்கள் சேவை
## வருநாளில் தொடர்ந்திட இறைவனை வேண்டிடும்

அதிபர், ஆசிரியர், மாணவர் ...
சார்பாக
திருமதி. பா.ஆனந்தராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர் குழாத்துடன்
திரு.நா.இராஜநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க

கல்வியுலகில் ஒரு கதாநாயகன்
திருமலை வரலாற்றில் ஒரு திவாகரன்
சொல்லில் அடங்காத புகழினையாளன்
சோர்வே இல்லாத தொழிலுறுதியாளன்

விக்னேஸ்வராவை விளங்குறவைத்தவர்
வித்தகப்பெருக்கை விழுப்புறசமைத்தவர்
மற்றையோர் மதிக்கும் மாட்சியுடையாளன்
மனமது நிறைவுடை மாண்புடையாளன்

வெள்ளைக்கலையில் விருப்புடையாளன்
விருப்பமாய் அதனை ஏற்புடையாளன்
கோதில்லா நல்ல கொள்கையுடையாளன்
கொண்டிடும் கடமையில் நிறைவுடையாளன்

கடமையைக் கண்ணாய் மதித்திடுவாராம்
கண்ணியம் கட்டுப்பாடுடையவராவர்
சமூகப்பணியிலும் சலிப்பின்றி நிற்பார்
சங்கரன் பணியிலும் தானின்று உழைப்பர்

அகில இலங்கையின் தமிழ்ஆசிரியர் சங்க
தனித்துவம் மிக்க தலைவருமானார்
ஆசிரிய நலனை அகத்தினில் கொண்டே
அளப்பரும் சேவையில் விழுப்புற நின்றார்

இரவியைப்போல இலங்கொளி வீசும்
இராஜநாதனாம் எங்கள் திலகம்
பரவிடும் புகழான் பல்லோர் வாழ்த்த
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!

அறுபது அகவை அடைந்துநின்றாலும்
அகமது தளரா அன்புடையாளன்
இளையவர் போல என்றென்றுமிருந்து
இன்புற்று நன்கு இனிதே வாழ்க

திருமதி. இராஜேஸ்வரி இராஜேஸ்வரன்
ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியர்
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மண்ணின் பிரியமான மைந்தரே ... ... ...

பெருந் தெருவின் பெருமைகளை
பெருமை பெற செய்தவரே
பெருந் தன்மை கொண்டு
பெரும் பணி செய்திட்டீர்

உயர்வான எண்ணமும்
உண்மையான உள்ளமும்
உழைப்பினிலே கடினமும்
உம்மிடம் கற்றுவிட்டோம்

இன மத பேதமின்றி
இசைவான கல்விக் கூடத்தில்
இராப் பகலாய் பாடுபட்டீர்
இறைவன் இரங்கிடுவான் இதயத்தால்

பல்வேறு செயற்றிட்டம் இங்கே
பணி என்ற சொல்லுக்கு
பல அர்த்தம் சொல்லி விட்டீர்
பணிகின்றோம் இன்று அல்ல என்றைக்கும்

ஜப்பானின் JICA திட்டத்தில்
ஜரைஞ்சக மாகி நீர்
ஜகத்திலே உயர்திட்டீர்
ஜகமெல்லாம் வாழ்ந்திடவே
திருமலையின் முதுகெலும்பாய்
முன்மாதிரியாய் முதன்மையாய்
ஆக்கிப் படைத்து விட்டீர் - கல்வி
அவையிலே அழகு பெற்றீர்

கடமைகளில் கடினமான பேச்சும்
கண்ணியம் தவறும் போது விழும் ஏச்சும்
அடிக்கடி நடந்து வழிப்புணர்வும்
வகுப்பறை ஓர அவதானிப்பும்
அடிக்கடி இதயத்தை துடிக்க வைத்தாலும்
உண்மை புரிந்து விட்டால்
இதயம் உறங்குவதும்
பயமும் பதட்டமும் எம்மை பதறவைத்தாலும்
உண்மையை உணரும் உயரிய பண்பினை
உணர்கின்றோம் அனைவரும் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட கல்வியில் விசேட கவனம்
விருப்புடன் சென்று வினாவி நீர் அவரை
விசேட தேவைகள் செய்து கொடுத்து
விசேடமாய் கற்க வழிசமைத்திட்டீர்

அமைதியான பார்வையும்
அரிய அளவான வார்த்தைகளும்
ஆட்டும் எம்மை சிலநேரம்
ஆளுமையின் தன்மை கொண்டவரே
வெளி இடத்தில் சென்று விட்டால்
நண்பராய் ஆகி விடுவீர்
எமக்கும் சேவை செய்து
உம்பெரும் தன்மை காட்டிடுவீர்

பிரச்சினைகள் உமக்கும்
பிரச்சினைகள் தந்ததில்லை
உடனடி நடவடிக்கை
உறுதியான முடிவுகளும்
உம் செயலை உயர்வாக்கும்

பிரிகின்ற இவ்வேளை
பிரிவில்லை இம் மண்ணின்
பிரியமான மைந்தர் நீர் ~ நாம்
பெருமைகள் சேர்க்கின்றோம்.

காலம் முழுவதும்
கண்ணியமான பணியின்
உன்னத பயனை பெற்று
உதய சூரியன் போல் ~ எம்
உயிர் உள்ளவரை
உயர்வாக வாழ வாழ்த்துகிறோம்
வாழ்க! வாழ்க! வாழியவே

திரு.அ.ஹரிகரன்
பகுதித்தலைவர்
ஆரம்பப்பிரிவு
தி/விக்நேஸ்வர ம.வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயங்கள் இணைந்து வாழ்த்துகின்றோம்

கோணைத் தென்றலதும் குரைகடலும்
குலைந்து பேசும் திருமலையில்
ஆணையின்றி அன்பு இராச்சியமாய்
அற்புதமாய் விக்னேஸ்வராதனை
வீணையது மீட்டு நாதமதாய்
விந்தையுடன் விழுமியக் கல்வியதும்
பூணும் அணிகலனாம் மாணவர்கென்ற
புரட்சி மிகு அதிபர் இவரன்றோ!

இன்சொல்லால் இனிமை கோர்த்து
இங்கிதமாய் பலரைச்சேர்த்து
நன்முகமாய் நன்னயமாய்
நன்மைகளே செய்தும் வந்து
அன்புருவாய் அகிம்சையுமாய்
அறப்பணியே கொள்கையுமாய்
புன்னகையாய் பூம்புனலாய்
புதுமைகள் கண்ட அதிபரன்றோ!

நிலவுலகின் கீழ் அமைந்த
நிறைந்த பணி ஆசிரியமன்றே
உலகில் உள்ள அனைவருக்கும்
உண்மையொளி தான் பரப்பி
பலகலைகள் பயிற்றவென
பண்புடனே முன்நின்று
நலமான முகாமையினால்
நலங்கள் சேர்த்த அதிபரன்றோ!

பிழைப்புத்தொழில் இதுவென்ற
பிற்போக்குப் பேச்சின்றி
உழைப்பு முழுவதுமே கல்லூரியின்
உயர்வை மூச்சாக்கி
அழைப்பு விடுத்து ஆசிரியர் குழாத்துடன்
அயராது அரும்பாடுபட்டு
இளைப்பாறிச் செல்லும் (இராஜநாதன் எனும்)
இவருக்கும் நிகர் உண்டோ

தனி ஒரு மாணவனுக்கு
தரமான கல்வியென
நனி சிறந்த திட்டங்களை
நயமுடனே தீட்டியே
கனிவான பேச்சினாலே
கைமேலே பலன்கண்டு
மனிதருள் ஓர் மாணிக்கமாய்
மகிமை பெறும் அதிபரன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கமான சிந்தனையாய்
திடமான கொள்கையினாய்
யார்க்குமொரு நீதியென
யாசகனிலும் பாசமென
மூர்க்கமான பகையின் மீதும்
முழுமையான அன்புகாட்டி
நேர்க்கனிய பார்வையுடன்
நேர்மை காத்த அதிபர் அன்றோ!

நலமிழந்து நலிவுற்ற கல்லூரிதனை
நயத்துமே பொறுப்பேற்று
வளமளந்து வகைவகையாய் சேர்த்து
வந்த பெறுபேறுகளை உயர்த்தி
உளமகிழந்து நாடோரும்
உச்ச விளைதிறன் கண்டு
களம் அமைத்து கல்வியே
கருத்தனம் என்ற அதிபர் அன்றோ

வெல்வதற்காகவே பூமி
விழுந்து கிடக்கிறது காலடியிலென
செல்வதற்கு முன் வீடு
செயல் புயலாய் சூழன்று
சொல்வதற்காவே நாளை உலகம்
சொர்க்கமாக்கி கல்லூரிதனை
நல்குவதற்கு அரிதான அதிபர்
நமது இராஜநாதன் அன்றோ

அரும்பாடு பட்டு ஆசிரியர் மீது
அளவு கடந்த கரிசனை காட்டி
பெரும்பாடுபட்டு கல்லூரிக்கு
பெருமளவு பயன்கள் கூட்டி
வரும் போகும் நிகழ்வுகளில்
வாழ்க்கைத்துணையுடன் பிரசன்னமாகி
திருப்பமான ஓர் அதிபராய்
திகழ்ந்த எங்கள் அதிபர் அன்றோ!

வெள்ளை உடையில் தூய்மையை
விரும்பி அகம் புறம் ஏற்றுமே
பிள்ளை மனதின் பெருங்குணங்கள்
பின்பற்றி நடக்கவே
கொள்ளை கொண்ட மனத்தினாய்
இல்லை உமக்கு ஓர் நிகரென
இதயங்கள் இணைந்து வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்
திருமதி.சந்திரசேகரன்
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவணைக்கும் அதியர்

தனது 60வது வயதில் அரச கல்விச்சேவை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு இளைப்பாறிக்கொண்ட அதியர் திரு. நாகராஜா இராஜநாதன் அவர்களுக்கு விக்கினேஸ்வரா கல்விச் சமூகம் சேவை நலன் பாராட்டு விழா ஒன்றை ஒழுங்கு செய்தமை வரவேற்கக் கூடிய ஒரு விடயமாகும்.

கல்வித்தொழில் என்பது இன்று ஒரு கடைச்சரக்கு போலாகிவிட்டது என சிலர் விமர்சிக்கின்றனர். அதிக கேள்வி நிலவும் ஒரு சூழலில் அதிகளவான வழங்கலும் இருந்துவிட்டால் எப்பொருட்களும் கடைச் சரக்குதான். கல்வியை ஒழுங்கு படுத்தப்பட்ட வகையில் வழங்கக்கூடிய நிறுவனங்களாக இன்று பாடசாலைகள் விளங்குகின்றன. சில துறை வகைப்பட்ட கல்வியை வழங்குவதற்கான அங்கீகாரம் பெற்ற ஏனைய கல்வி நிறுவனங்களும் காணப்படுகின்றன. பாடசாலையின் கல்வி வழங்கல் தொடர்பாக சமூகம் கொண்டுள்ள சந்தேகம் காரணமாகவும், பரீட்சைப் போட்டிகள் காரணமாகவும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்புவது என்பது இன்று நாகரிகமாக மாறிவிட்டதன் காரணத்தாலும் பாடசாலை முறைமை என்பது இன்று அழுத்தம் நிறைந்ததாகி விட்டது.

பாடசாலை முறைமை எதிர்கொள்கின்ற இத்தகைய சவால்களின் மத்தியிலும் கூட சமூகத்திற்கு கல்வியை வழங்குகின்ற பெரும் பொறுப்பு இன்றும் கூட பாடசாலைகளிடம் தான் உள்ளது என்பதை மறுக்க முடியாது. இதற்கான காரணம் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற ஆசிரியர்களும், பாடசாலைகளை நேர்காட்டுகின்ற அதிபர்களும் இன்றும் எங்கள் மத்தியில் இருப்பதன் காரணமாகத்தான் பாடசாலை முறைமை என்பது நிலைத்து நீடிக்கின்றது.

இத்தகைய ஒரு அர்ப்பணிப்பான அதிபராகத்தான் திரு. இராஜநாதன் அவர்களை எங்களால் பார்க்க முடிகின்றது. திருகோணமலை நகரத்திலுள்ள கீழ் மத்திய தர மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதில் மிக முக்கியமான பங்களிப்பை மிக நீண்ட காலமாக வழங்கி வரும் ஒரு பாடசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகும். இப் பாடசாலையில் பத்துவருடங்களுக்கு மேலாக திரு. இராஜநாதன் ஆற்றிய பணி பாராட்டுதலுக்குரியது. ஏனைய அதிபர்களுக்கு முன் மாதிரியானது.

ஒரு பாடசாலையின் நிருவாகியாக மாத்திரம் இவரது பணியை மதிப்பீடு செய்து விட முடியாது திரு. ஜராஜநாதன் அவர்களது கல்விப்பணியோடு எனக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

நான் கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்று திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கு வந்த அதே ஆண்டில்தான் (1982) திரு. இராஜநாதன் அவர்களும் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தனது பயிற்சியை முடித்துக்கொண்டு இந்துக்கல்லூரிக்கு வந்தார். ஒரு சிறந்த கணித ஆசிரியராக அவர் திகழ்ந்தார். அப்போது இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்த திரு.அ.சிவலோகநாதன் அவர்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார். கல்லூரியின் வளர்ச்சியில் நிறைய பங்கெடுத்துக் கொண்டார்.

இக் காலக் கட்டத்திலேதான் செயலற்றுப் போயிருந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளையைப் புனரமைப்பதில் இவர் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அப்போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்த அமரர் டி.எஸ்.கே. வணசிங்க, செயலாளராக இருந்த திரு. த.மகாசிவம் ஆகியோரையும் வரவழைத்து திருகோணமலை கிளையை வெற்றிகரமாக புனரமைத்தார். பல ஆசிரியர்கள் புதிதாக அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டனர். 1975ம் ஆண்டிலிருந்து நான் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவனாக இருந்த போதிலும் திரு. இராஜநாதன் அவர்களின் தூண்டுதலின் பேரில் முன்மைப்போடு நானும் ஒரு செயற்படு அங்கத்தவராக ஆகிக்கொண்டேன்.

பின்னாளில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் என்ற பொறுப்பை நான் வகிப்பதற்கான ஒரு அத்திவாரத்தை ஆக்கித் தந்தவர் திரு. இராஜநாதன் என்பதை நான் மறந்து போக முடியாது.

அந்நாளில் தொழிற்சங்க பணிகளை இவருடன் இணைந்து செய்திருக்கின்றேன். கல்வியில் பின் தங்கியுள்ள பிரதேசங்களின் பால் இவருடைய கவனம் இருந்ததை நான் அறிவேன். அந் நாட்களில் இவருடன் இணைந்து இன்னும் சில ஆசிரியர்களுடன் திரியாய் போன்ற தூர பிரதேசங்களுக்குச் சென்று மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடத்தியதை நினைவுபடுத்திப் பார்க்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985ம் ஆண்டில் திருக்கோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக மூதூர் மாணவர்களின் உயர்தரக் கல்வி பாதிக்கப்பட்டிருந்த வேளையில் அம் மாணவர்களை திருக்கோணமலைக்கு அழைத்து வந்த பாடசாலைகளில் அவர்களுக்கு தங்குமிட வசதி உணவு வசதிகளை அளித்து விசேட வகுப்புக்களை ஒழுங்கு செய்து பரீட்சைக்குத் தயாராக்கி அனுப்பிய செயற்திட்டத்தில் திரு. இராஜநாதன் அவர்கள் உற்சாகமாக பங்கு கொண்டிருந்ததை குறிப்பிட வேண்டும்.

திருக்கோணமலை மாவட்ட மாணவர் நலன்புரிச் சங்கத்தில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து எமது புலம் பெயர்ந்த இளைஞர்களின் நிதி உதவியை பெற்று எமது மாவட்டத்தில் உள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்விக்கு உதவி செய்கின்ற பெரும் பணியை கடந்த காலங்களில் ஆற்றியிருந்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து நான் விலகியதன் பின்பு திரு. இராஜநாதன் அவர்கள் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டு சங்கத்தை மிக நேரிய வழியில் நடத்திச் சென்றார். ஆசிரியர்களின் தொழில்சார் பிரச்சனைகளில் அக்கறையோடு ஈடுபட்டுச் செயலாற்றினார். அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் முதலான உயர் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள், இடமாற்றச்சபை போன்றவற்றில் அவரது செயற்திட்டத்தில் திரு. இராஜநாதன் அவர்கள் உற்சாகமாக பங்கு கொண்டிருந்ததை குறிப்பிட வேண்டும்.

திருக்கோணமலை மாவட்ட மாணவர் நலன்புரிச் சங்கத்தில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து எமது புலம் பெயர்ந்த இளைஞர்களின் நிதி உதவியை பெற்று எமது மாவட்டத்தில் உள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்விக்கு உதவி செய்கின்ற பெரும் பணியை கடந்த காலங்களில் ஆற்றியிருந்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து நான் விலகியதன் பின்பு திரு. இராஜநாதன் அவர்கள் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டு சங்கத்தை மிக நேரிய வழியில் நடத்திச் சென்றார். ஆசிரியர்களின் தொழில்சார் பிரச்சனைகளில் அக்கறையோடு ஈடுபட்டுச் செயலாற்றினார். அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் முதலான உயர் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள், இடமாற்றச்சபை போன்வற்றில் அவரது செயலாற்றலை நான் நேரில் கண்டுள்ளேன். ஆசிரியர் சமூகத்தின் நலன் குறித்தும், மாணவர்களின் கல்வி நலன் தொடர்பாகவும் அக்கறையுடன் செயற்பட்ட அதிபர் திரு. இராஜநாதன் அவர்களை கல்விச் சமூகம் என்றைக்குமே மறந்து விட முடியாது. தொழிற் சங்கப் பணிகளிலும், பாடசாலையின் நிர்வாகப் பணிகளிலும் சகலரையும் அரவணைத்துச் செல்லும் ஒரு பாங்கினை திரு. இராஜநாதன் அவர்கள் கொண்டிருந்ததை நான் அறிவேன்.

தன்னுடைய பாடசாலையின் கதவுகளை சமூகத்திற்காக எந்நேரத்திலும் திறந்து வைத்திருந்தவர். சமூக நிறுவனங்களின் பல்வேறு நிகழ்வுகளாலும், மாணவர், ஆசிரியர்களின் செயற்பாடுகளினாலும் கடமை நாட்கள், விடுமுறை நாட்கள் என்ற பாகுபாடின்றி வருடத்தின் முழு நாட்களும் உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பாடசாலையாகவே திருக்கோணமலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் திகழ்ந்து கொண்டிருந்தது.

உயர் கல்விப் பெறுபேறுகளுக்காகவும், பாடசாலையின் தோற்றம், பொலிவு, அமைப்பொழுங்கு என்பவற்றுக்காகவும் மிகக் கடுகடுப்போடும், இறுக்கமாகவும் இருக்கும் அதிபர்கள் மத்தியில் இவர் ஒரு வித்தியாசமானவர். வறுமைப்பட்ட பெற்றோர்களையும், வருத்தப்பட்ட மாணவர்களையும் அரவணைத்து பாடசாலையை நடத்தியவர். புலன் குறைந்த, விசேட தேவைகளுடைய மாணவர்களைத் தனது பாடசாலையில் ஒரு பிரிவாக வைத்திருந்து அவர்களது வாழ்க்கையிலும் மறுமலர்ச்சி ஏற்பட வழி அமைத்தவர். வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து பிள்ளைகள் கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று அக்கறையுடன் விக்கினேஸ்வரா ஆசிரியர் சமூகத்தையும் வழி நடத்தி தனது நோக்குகளில் வெற்றி கண்டவர்.

இத்தகைய ஒரு அதிபர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டாலும் தனது கல்வி சமூகப் பணிகளிலிருந்து ஓய்ந்திருக்க மாட்டார் என நம்புகின்றேன். அவரிடமிருந்து சமூகம் இன்னும் எதிர்பார்க்கின்றது.

அன்னாருக்கு எனது மனமுவந்த வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சி. தண்டாயுதபாணி
சிரேஸ்ட நிபுணத்துவ ஆலோசகர்,
GIT/ESC
திருக்கோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழிகாட்டியாய் ...

கடமை கண்ணியம் கட்டுப்பாடுதனில்
கணப்பொழுதேனும் சிந்தை சிதறாதவராய்
நிர்வாக நுட்பங்கள் அனைத்தும் தெளிவுற்று
நல்லதொரு முதல்வராய் ஆற்றிய சேவைகள்

பள்ளி மாணவரின் கல்வி நிலைதனை
பக்குவமாய் ஆய்ந்தறிந்து முன்னேற்ற
முக்கியமாய் இடம்பெயர்ந்த மாணவரை
முடிந்தவரை உயர்த்திட நீர் செய்த பணிகள்

சமூகத் தொண்டுகள் பலவும் சளைக்காது செய்திடுவீர்
சிரமதானமா? ஆலயத்திருத்தொண்டா? திருமணமா?
அபரக்கிரியையா? அவலத்தில் நோயாளியா
அங்கெல்லாம் நின்றிடுவீர் துணையுடன்

பாடசாலைக்கல்வியில் மட்டுமன்றி
பல்துறைசார் வளர்ச்சியிலும் ஆசிரிய, மாணவரை
பக்க பலமாய் நின்று வழி நடத்திய உதாரண புருஷர்
பரபரப்பு படபடப்பு இல்லாத பண்பாளன்

நல்லொழுக்கமதில் மாசுமறு சிறுதேனுமின்றி
நேரமுகாமைத்துவம் கடைப்பிடிக்கும் நேர்மையான தலைவன்
கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளம் கொண்டு
கண்டிப்பும் கனிவும் நிறைந்த கலவை அவர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில்
இணைந்து கொண்ட நாள் முதல்
ஆசிரிய சமூகத்திற்காய் குரல் கொடுத்து
அவர்தம் இடர் நீக்க அளவையற்ற சேவைகள்

இத்தனையும் எம்மவர்க்கு என்றும் வழிகாட்டும்
இராஜநாதன் என்னும் இணையற்ற தலைவர்
நல்வழி காட்டியாய் என்றும் திகழ்ந்திடுவார்
என்றுரைப்பதில் பெருமை கொள்ளும் என் உள்ளம்

திருமதி. N. குணசேகரம்
முன்னாள் ஆசிரியர்
தி/விக்நேஸ்வரா ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்ற அதிபர் திரு.நா.இராஜநாதனுடன் கடமையாற்றி
பிற பாடசாலைகளிற்கு சென்ற ஆசிரியர் குழாம்



பாடசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுடன்
ஓய்வு பெற்ற அதிபர் திரு.நா.இராஜநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்ட அதிபரும், சிறப்பும்

எழில் கொஞ்சும் அழகுடன்
திருமலை நகரின் மத்தியிலே
விக்னேஸ்வரர் கலைவாணி துணையிருக்க
கவின் நிலையுடன் கலையும் விளங்க
தலை நிமிர்ந்து நிற்கும் கூடம்
எங்கள் விக்னேஸ்வர மகா வித்தியாலத்திலே!

வித்தியாலயத்தின் தலைசிறந்த அதிபராய்
வெள்ளை உடையுடனும் உள்ளத்துடனும்
வருகை தந்து
எம் நலம் சிறக்க தன்னை அர்ப்பணித்து
அனைத்து விடயத்திலும் கண்ணும் கருத்துமாய்
வளாகம் முழுவதும் சுற்றிவரும் எங்கள்
அன்பு அதிபரே!

பெயரில் ராஜாவாய் செயலிலும் ராஜாவாய்
அனைத்து ஆசான்களையும் எறும்பு போல்
என்றும் சுறுசுறுப்பாய் இயக்கி
மாணவர் கல்விக்கு வித்திட்டமகானே!
மாசிலா உம்பணி மறப்போமா? நாம்

கல்வி, ஒழுக்கம், உயர்வு எனும்
மங்காப் புகழுடன் என்றும் நாம் தரணியில்
தலை நிமிர்ந்து வாழ்திடவே
அனைவர் உதவியையும் ஒன்றாய் திரட்டி
பௌதீக வளங்களை வாரி வழங்கிய வள்ளலே!

நாம் கண்ட அதிபரில் நீங்கள் தனிரகம்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
எவ்விழா என்றாலும் அது ஒரு
தனி விழாவாய், பெருவிழாவாய் சிறக்க
அயராத உழைப்புடன் பலரும் பாராட்ட
வித்திட்ட வினைத்திறன் மிக்கவரே!மாணவச்

செல்வங்கள் என்று எமை போற்றி
எம் நலம் காக்க பல நிதி உதவிகள்
வழங்கியும், செயற்றிட்டங்கள் வகுத்தும்
அதிபராய் எமக்கு ஐங்குரவனாய் விளங்கி
அன்பு மாணவர்க்காய் அரும்பாடுபட்ட
சிற்பியே!

நாம் கல்வியிலும் இணைவிதானச்
செயற்பாடுகளிலும்
தேசிய மட்டம் வரை போட்டிக்கு சென்று
தேசிய பாடசாலைகளிடையே போட்டியிட்டு
வெற்றிக்கொடி நாம் நாட்ட
எம்மை செம்மையாய் செதுக்கிய சிற்பியே!

மாபெரும் சபைதனில் நீங்கள் நடந்தால்
மாலைகள் விழவேண்டும் மகிழ்விக்க வேண்டும்
ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று
என்றும் போற்றிப்புகழ வேண்டும் என்று
உளம் மகிழ்ந்து உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

2011 கலைப்பிரிவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தெரு வரலாற்றின் ஓர் தடயம்.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து எம்மையெல்லாம் பாவப்பெருந்துயர்களில் இருந்து காத்துக் கொண்டிருக்கும் திருக்கோணநாதர் சிவ பூமியில் மண்ணின் மைந்தனாய்ப் பிறப்பது அரிய செயலாகும். இத்தகைய மண்ணின் மைந்தர்களாகப் பிறந்து விட்டால் போதாது, அவரவர் பணிகளை பண்புறச் செய்யக் கிடைப்பதும் அரிய செயலாகும்.

இத்தகைய பணியிலே எமது அதிபர் உயிரினையும், உள்ளங்களையும் காக்கும் உயரிய பணியிலே எண்ணும் எழுத்தும் முதன்மை பெற கணித ஆசிரியராக நியமனம் பெற்று திறம்பட பணிபுரிந்து மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களை சமூகத்தில் உன்னத பிரஜைகளாக்கி உள்ளார். அவர் ஒரு சிறந்த நிர்வாகி என்பதற்கு அடையாளம் படிப்படியாக பகுதித்தலைவர் போன்ற பதவிகளை வகித்து ஒரு பாடசாலையின் தலை சிறந்த நிர்வாகியாகச் செயற்பட்டு வருவது கண்கூடே.

அதிபர் பணியில் அவரது பண்புகளை சுட்டிக் காட்டுவது எமது தலையாய கடமையாகும். இதுவரையில் நேரம் தவறாத ஒரு சிறந்த அதிபராக மட்டுமல்லாது முன்மாதிரியாகவும் இருந்துள்ளார்.

இது பெரிய விடயமல்ல சகல ஆசிரியர்களையும் குறித்த நேரத்திற்கு முன்பாக பாடசாலைக்குள் நுழைய வைக்கும் ஆற்றலுமுடையவர்.

ஆசிரியர்கள் அனைவரும் சேவை செய்ய வேண்டும். அல்லது பணியில் இருந்து ஓய்வு பெறவேண்டும் அல்லது பொருத்தமான பாடசாலை பார்க்க வேண்டும் என்பதில் உறுதியான கொள்கை உடையவர். உறுதியான கல்வி தமிழ் மாணவ சந்ததியினருக்கு கிடைக்கவேண்டும் என்பதே அவரின் அவா. ஆசிரியர் தமது நோய்களையும் துன்பங்களையும் கூறி சிறார்களது எதிர்காலத்தை படுகுழியில் விழுத்த விரும்பாத ஒரு சிறந்த அதிபராகத் திகழ்பவரே இவர்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் விற்பனர் ஒருவரிடம் குறைகள் காணப்பட்டால் அவற்றை நேருக்கு நேர் கூறுகின்ற மனவலிமையுடையவர். அதற்காகப் பிறரிடம் கதைத்து அலட்டித் திரியும் பண்பு இல்லாத உன்னத மனிதர். கடுமையான சொற்கள் பலசமயம் பலரை மனவேதனைப்படுத்தினாலும் அவரால் அந்த சுட்டிக்காட்டப்பட்ட தவறை மீளத் தவறு செய்யாத அளவுக்கு ஆழமான தடையங்களை பதிக்க வைக்கும் உயரிய பண்பு உடையவர்.

இவற்றையெல்லாம் விட எதையும் தனது நேரான அவதானிப்புக்களினூடாக ஆதாரப்படுத்திக் கதைப்பதால் அடுத்தவர் வாய் ஒருபோதும் எதிர்க்கதை கதைக்காதவாறு செய்யும் ஆற்றலுடையவர்.

அதுமட்டுமன்றி மாணவர் ஒழுக்கங்களில் அதீத அக்கறை உடையவர்.

தனக்குக் கிடைத்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி உன்னதமான செயற்றிறன் மிக்க அதிபர் அவர் தகவல்களை முறையாக பேணும் ஆற்றலுடையவர். தற்பெருமையில்லாதவர். தன்னையும் தன்னிருப்பிடத்தையும் எளிமையாக்கும் பண்புடையவர். வசதிகள், வாய்ப்புக்களை பாடசாலைக்காக முறையாகப்பயன்படுத்தும் தன்மையுடையவர்.

இவரது ஆளுமைமிக்க திறமையே இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தலைமைத்துவப்பதவியும், இவருக்கு அளித்தது எனலாம். இவற்றை விட வருடாவருடம் நடைபெறும் திருக்கோணேஸ்வரர் பணிகளையும் முன்னின்று முனைப்பாக செயற்படுவதில் விற்பனர். இதுமட்டுமல்ல சிறந்த தலைவருக்கான பண்புகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமானது தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிதலாகும். இதுபோன்று தமது மேலதிகாரிகளுக்கு கட்டுப்பட்டுச் செயற்படக் கூடியவர். அதேநேரம் தேவையேற்படும் சந்தர்ப்பத்திற்கேற்ப உடனடியாகப்பேசவும் ஐயங்களைத் தெளிவு படுத்தவும். அவரால் முடியும் இவற்றுக்கெல்லாம் மேலாக தனது பாடசாலை மேலும் மேலும் வளர வேண்டும், முதன்மை பெற வேண்டும் என்பதற்காக முனைப்புடன் செயற்படும் அதிபர்.

2006ம் ஆண்டு யப்பான் நாட்டினரும் எமது வலயமும் இணைந்து JICA திட்டம் திருக்கோணமலையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது எமது வலயத்தில் பத்துப் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டன.


அதிலும் JICA செயற்பாடுகளை திறம்பட வழியமைத்து, திருலை வலயமும் யப்பானிய அதிகாரிகளும் இணைந்து நடாத்திய நேரடி அவதானிப்புக்கள், புள்ளிகளின் அடிப்படையிலும் அவதானித்து அந்தப் பத்துப் பாடசாலைகளுக்குள்ளும் முதற்தரப் பாடசாலையாகவும், திருக்கோணமலையில் மாதிரிப் பாடசாலையாகவும் சேர்த்த பெருமை எமது அதிபரையே சாரும்.

அதுமட்டுமல்ல யப்பானிய செயற்பாட்டாளர்களும், திருகோணமலை வலயமும் நடாத்திய இணை மதிப்பீட்டில் JICA பாடசாலைகளுக்கான சிறந்த அதிபர், சிறந்த JICA இணைப்பாளர், சிறந்த கணித, விஞ்ஞான, ஆங்கில, ஆரம்பக்கல்வி தொடர்பான பாடங்களில் கற்பிக்கும் தரமான ஆசிரியர் விருதுகளையும் ஒரே மேடையில் தக்கவைத்துக் கொண்ட பெருமை எமது அதிபரையே சாரும்

அனைவரையும், தனது வார்த்தைகளுக்குக் கட்டுப்பட வைக்கும் திறன்வாய்ந்த தலைமை நிர்வாகி இவை எல்லாவற்றுக்கும் மேலாக பல்லின சமூகத்தை ஒருங்கிணைத்து செயற்படும் ஆற்றலுடையவர்.

இத்தகைய உன்னத பண்புகளையுடைய அதிபரது சேவையை இச்சமூகம் இழப்பது என்பது கவலைக்குரிய விடயமே இருந்தாலும் இது காலத்தின் தேவையாகும். எம் அதிபர் தேகசுகமும் நீண்ட ஆயுளையுமுடையவராக இன்னும் எங்களுக்கும் எமது மண்ணிற்கும் மாண்புறு சேவைகள் செய்ய வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.அ.ஹரிகரன்
பகுதித் தலைவர் (ஆரம்பப்பிரிவு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அச்சுதம்" சஞ்சிகையின் கர்த்தா

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த இயற்க்கை அழகு கொட்டிக்கிடக்கும் திருக்கோணமலை நகரத்தின் மத்தியில் அமைந்து விளங்கும் தி/விக்நேஸ்வர மகாவித்தியாலத்தில் "அச்சுதம்" சஞ்சிகையானது மாதந்தோறும் மலர்ந்து 1ம் ஆண்டு நிறைவு மலர்தொடக்கம் 5ம் 7ம் ஆண்டு நிறைவு மலராகவும் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா மலராகவும் தன்னை அலங்கரித்து மணம்பரப்பி இன்னும் வித்தியாலயத்தில் தனக்கென தனியிடத்தினைப் பெற்று சிறப்புடன் விளங்குகின்றது.

இவ் "அச்சுதம்" சஞ்சிகையின் மலர்வுக்கும் அரிய முயற்சிக்கும் வித்திட்டவர் எங்கள் மதிப்புக்குரிய அதிபர் ந.இராஜநாதன் அவர்களே என்றால் அது மிகையாகாது. இதற்கு அடிப்படைக் காரணங்கள் அவரது ஆக்கபூர்வமான சிந்தனையும் நம்பிக்கையும் ஆகும். நல்ல சரியான சிந்தனை எமது வெற்றிக்கு ஆதார சுருதி ஆகின்றது. ஏனெனில் சிறந்த எண்ணங்கள் தான் நற்சொற்களாகின்றன. இச் சொற்கள் நற்செயல்களாக உருவெடுக்கின்றன. இவையே நற்பழக்கங்களாக உதயமாகின்றன. பின் இவை சிறந்த மனித பண்புகளாகமாறுகின்றன. "நற்பண்புகளுடையவன் வெற்றி பெறுவான்" என்பது வெள்ளிடைமலை. ஆகவே வெற்றி என்பது எமது எண்ணங்களிலேயே தங்கியுள்ளது.

இத்தோடு இப்பிரபஞ்சத்திலுள்ள எந்த சக்தியாலும் அசைக்க முடியாத சக்தி அது தான் மனிதனின் மனோசக்தி. இவ் மனோ திடத்தை அதில் விருட்சமாக வளரும் நம்பிக்கையை நாம் சரியான பாதையில் இட்டுச் செல்வோமாக இருந்தால் மகிழ்ச்சியான வாழ்வு மலரும். இந்த மலர்ச்சியில் நம்முள் பொறுமை, அழகு, அன்பு, தூய்மை, நேர்மை, மனிதநேயம் ஆகிய பண்புகள் வெளிப்பட்டு வாழ்க்கை இன்ப மயமாகிவிடும்.

இத்தகைய உள உறுதிப்பாட்டை உடைய எமது அதிபரின் ஆக்கபூர்வமான தூர நோக்கு சிந்தனையுடன் மாணவர்களின் எழுத்தாக்க சிந்தனைக்கு களம் அமைத்து 27.03.2003 அன்று கன்னி முயற்சியாக "அச்சுதம்" சஞ்சிகையினை வெளியிட்டோம்.

இத்தோடு மட்டுமல்லாது எமது அதிபர் சிறந்த பெரியார்களின் கூற்றுக்களையும் தமது உள்ளத்திலே பதித்து அதன் வழியிலும் தன் செயற்பாடுகள் தொடரவேண்டும் அவை யாவர்க்கும் பயன்மிக்கனவாக அமைய வேண்டும், அவை தொடர்ந்தும் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதும் அவரது நீண்ட நாள் அவாவாகவும் இருந்து வந்தன.

அந்த வகையில் "எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன் சொந்தக் காலில் நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" என்கிறார். சுவாமி விவேகானந்தர்.

இத்தோடு ஒரு பண்பாடோ, சமயமோ, நிறுவனமோ நிலைத்திருக்க வேண்டுமாயின் காலத்துக்கு காலம் தோன்றும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்கும் முகங்கொடுக்கும் ஆற்றல் பெற்றதாய் அது இருத்தல் வேண்டும். பழைய பெருமைகளிலும் சாதனைகளிலும் தன்னை இழந்து விடாது உகந்தவற்றைப் பேணி முன்னைய காலங்களில் ஈட்டிய அனுபவங்களை துணையாக கொள்வதோடு எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய புதிய முயற்சிகளிலும் முனைந்து நிற்கவேண்டும் "மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி" என்கிறார். மகா கவி பாரதி.

இத்தகைய பெரியார்களின் கூற்றுப்படியும் மாற்றம் ஒன்றே மனித சமூகத்தை மாற்றியமைக்கும் உறுதி உடையது எனவே நம்பிக்கையுடன் எம்மை நாம் புதிய கருத்துக்களையும் வல்லமைகளையும் தேடி வளர்க்கும் ஆற்றல் நிறைந்தவர்களாக்கி அவர்களை வையகத்தில் வாழ்வாங்கு வாழ வளப்படுத்த வேண்டும் என்பதும் அவரது இலக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அன்று மலர்ந்த "அச்சுதம்" என்பது அறுகும் அரிசியும் கூடிய கலவையாகும். இவை அழிவற்றவை உயிரினங்களை வாழவவைப்பதாகவும் வாழ்த்துக்கூறுவதாகவும் அமைந்துள்ளன. அத்தோடு வள்ளுவர் பெருந்தகையின்

"அகர முகதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற குறள் மணியில் அகரம் என்பது சொல்லாக்கத்திற்கு முதலிடம் பெற்றமையினாலும் இச் சஞ்சினைக்கு "அச்சுதம்" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேலும் "ஆல் போல் தனைந்து அறுகு போல் வேரூன்றி" என்ற தமிழ் பெரும் மூதாட்டி ஔவையாரின் கூற்றுக்கிணங்க இவ் அச்சுதம் சஞ்சிகையானது பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி ஒவ்வொரு மாதமும் புதுப்பொலிவு பெற்று பல இதழ்களாகி மணம்பரப்பி மாணவர்களிடத்தே அறுகு போல் வேரூன்றி பதிந்து தனக்கென அழியா இடத்தைப் பெற்று மிளிர்கின்றது. எச்சுவையும் குன்றாது அள்ளி வழங்கும் அச்சுதம் சஞ்சிகை "வாழ்க"

அதன் கர்த்தா எங்கள் அதிபர் இராஜநாதன் வாழ்க! என்றும் சிறப்புடனும் சீருடனும் வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகின்றோம்.

திருமதி. வ.வசிகரன்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

# எமது பாடசாலையில் குருளைச் சாரணியமும், சாரணியமும்.

"தர்மம் தலை காக்கும்" என்னும் கூற்றிற்கு இணங்க வாழ வழிகாட்டும் விழுமியங்களை பின்பற்றுவது அனைவரது கடமைப்பாடுகளில் ஒன்றாகும் அந்த வகையில் தான் நான் அடைந்த சந்தோசமான அனுபவங்களை தாய்நாட்டு இளைஞர்கள் ஏன் அனுபவிக்க கூடாது என்று சிந்தித்ததன் விளைவாக 1907இல் "ரொபட்ஸ்டீவின்சன் ஸ்மித் பேடன் பவல்" என்னும் ஆங்கிலப் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்டதே சாரணர் இயக்கமாகும் இளம் சிறார்களை தன்னம்பிக்கையுடையவர்களாகவும், தான் வாழும் சமூகத்திற்கு உபயோக முள்ளவராகவும் மாற்றுவதோடு சமயத்திற்கும் தொண்டாற்றி அவர்களை ஓர் இறைமையுள்ள பூரண மனிதர்களாக்குவதற்கு நோக்கை நிறைவு செய்வதற்கு பாடசாலைகள் என்ற சமூக நிறுவனங்களாலேயே முடியும் இன்று பாட இணைச் செயற்பாடுகள் பல உள்ளன. அதில் ஒன்று சாரணியமும் ஆகும் கல்விச் சிந்தனையாளர் ஜோன் டூயியின் கருத்து அனுபவங்களினூடு கல்வி வழங்குவதற்கு என்று திடமதாகக் குறிப்பிட்டுள்ளார். எமது பாடசாலையும் அக்கருத்தை விட்டு விடவில்லை. இப்பாடசாலை மாணவர்களும் இச் சாரணியத்தைப் பின்பற்றி நல்லதொரு பிரசையாக திகழ வேண்டும் என்பதற்காக திரு என். இராஜநாதன் அதிபர் அவர்கள் இதற்காக முன்நின்று உழைத்தமையை நாம் ஒரு போதும் மறந்து விடவில்லை பாடசாலையில் நடைபெறும் ஆசிரியர் கலந்துரையாடலில் இது பற்றி எடுத்துரைத்து அதற்கான ஆசிரியர்களை ஒழுங்கு செய்து, மாணவர்களை தெரிவு செய்து அவர்களின் சேவை பாடசாலையில் மட்டுமல்லாது செல்லும் இடங்களில் பின்பற்றி வாழ ஆக்கமும் ஊக்கமும் ஆசிரியர்களுக்கு அளித்த பெருமை அவரையே சாரும் எமது பாடசாலை சாரணிய மாணவர்கள் மற்றைய பாடசாலை சாரணிய மாணவர்களில் குறைந்தவர்கள் அல்லர் என்ற விளிப்புணர்வை ஊட்டி வளர்த்த பெருமையும் இவரையே சாருகிறது பாடசாலையிலும் கூட அதற்கான பூரணபயிற்சியை இம் மாவணர்கள் பெற்று வாழ வழி வகுத்து பாடசாலை மட்டங்களில் நடைபெறும் கம்போரி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி அவர்களிடம் மறைந்து கிடக்கின்ற திறமையை வெளிக்காட்டி அதற்கான பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி இவ்வாறான போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்கள் பெற மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்த பெருமை எமது அதிபர் வழிகாட்டலாகும் அத்தோடு மட்டுமல்லாது ஜனாதிபதியால் எமது பாடசாலை மாணவர்கள் தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ள பெருமை எங்கள் அதிபர் இராஜநாதன் ஐயா அவரையே சாரும் என்பதில் ஐயமில்லை என்று எடுத்துக்கூறாமல் இருக்கமுடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருளைச்சாரணியத்தை நோக்கின் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எனவே சிறுவயதில் கற்கும் நற்பழக்கவழக்கங்களே ஒருவரைப் பூரணமனிதன் ஆக்கும். என்பது சான்றோர் கூறியவாக்கு அதற்கு இணங்கச் சாரணியத்தை பேடன் பவல், நற்பழக்கங்களைச் சிறுவர்களுக்குப் பழக்கச் சிறுவயதே உகந்தது என எண்ணினார் எனினும் அக்காலத்தில் 11 வயதுக்கு உட்பட்ட அதாவது 7 – 11 வயதுடையோர் ஆவலையும் ஆர்வத்தையும் கண்ட சாரணத் தலைவர்கள் அவர்களை தம்மோடு இணைத்துக்கொண்டனர் இவர்களின் ஆர்வமானது சாரண அணியின் சாரணர்களை விடவும் அதிகமாக இருந்தது குருளைச் சாரணர்களுக்கான கையேடு பேடன் பவலாலேயே எழுதப்பட்டது. இதன் சிறப்பம்சம் என்னவெனில் இக்கதையில் காணப்படும். பாத்திரங்களும் எக்காலத்திலும் சிறுவர்களுக்கு ஏற்றதாகும். இக்கதைகள் சிறுவர்களை ஆர்வம் கொள்ள வைப்பதோடு மனித சமுதாயத்திற்குத் தேவையான நல் ஒழுக்க விதிகளையும் நேர்மையான, கண்ணியமான வாழ்வையும் சிறுவர்களின் கற்பனைகளையும், வீரச்செயல்களையும் அதிகரிக்கும் தன்மையும் கொண்டவையாக உள்ளன. எமது பாடசாலைச் சிறார்களும் பங்கு கொள்ள வேண்டும் என்ற எங்கள் அதிபர் திரு.இராஜநாதன் ஐயா அவர்கள் இதற்காக முன்நின்று எமது சிறார்களின் பெற்றோர்களை அழைத்து அதற்கென ஆசிரியரையும் ஒழுங்கு செய்து கலந்துரையாடலை நடத்தினர் பெற்றோரும் சிறார்களை சேர்த்துக் கொள்ள அனுமதி அளித்தார்கள் மாணவச் செல்வங்கள் மற்றைய பாடசாலையுடன் பல போட்டிகளில் பங்கு கொண்டு பல பரிசில்களையும் பெற்றுக்கொண்டிருக்கின்றனர் இந்த விளிப்புணர்வை ஊட்டி வளர்த்த பெருமையும் எங்கள் இராஜநாதன் அதிபர் அவர்களையே சாருகிறது.

குருளைச் சாரணர்
வயதெல்லை 7 –11 வயது
நிறம் – மஞ்சள்
மகுட வாக்கியம் – "இயன்றவரை திறமையாய்செய்"

இந்த மகுட வாக்கியத்துக்கு அமைய எமது சிறார்களும் திறம் படவேண்டும். எங்கள் இராஜநாதன் அதிபர் அவர்களும் திறமை கேட்டு உளங்குளிர வேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுகின்றோம்.

குருளைச் சாரணர்சார்பாக
திருமதி. அ.செல்வரெட்ணம்
உப குருளைச்சாணர்
குழுவினர்

# விக்னேஸ்வராவின் விளையாட்டுத் திறனில் முன்னாள் அதிபரின் வகிபங்கு

சேவை என்பது மனித விழுமியங்களுடாக மகத்துவம் நிறைந்ததாக உள்ளது. அதிலும் தன்னலமற்றதும் பயனை எதிர்பாராததுமான சேவையே மிகமிக மாட்சிமைப்பட்டது. சேவை செய்பவர்கள் சமூகத்தில் உயர்ந்து நிற்கின்றனர். சேவை மூலம் அதனைப் பெறுபவரும் வழங்குபவரும் அளவிலா உவகை அடைகின்றனர். சேவை செய்யும் போது இன்னார், இனியவர், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி சேவை செய்வதென்பது இலகுவானதல்ல. அதனையும் தனது ஆளுமைத்திறனால் மிகத் திறம்பட செய்யும் ஆற்றல் உடையவர் அதிபர் திரு.நா.இராஜநாதன் என்றால் அது மிகையாகாது.

மனித உயிர் வாழ்விற்கு அடிப்படையாக காற்று, நீர், உணவு, உடை இருப்பிடம் என்பவை தேவை போன்று, மனித உயர் வாழ்விற்கு தேவையான உண்மை, நீதி, அன்பு, கருணை எவர்க்கும் உதவும் மனப்பாங்கு, தர்மம், நேர்மை, சுதந்திர உணர்வு, அமைதி முதலான மனிதப் பண்புகள் அவசியம். எமது அதிபர் சேவையாற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எம்மால் இவற்றைக்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்ததுதென்பது யாவருமறிந்ததே.

அறுபதாவது அகவையிலும் எமது அதிபர் அவர்களின் நடை, உடை பாவனைவ் மாணவப் பருவ வாலிபனைப்போல் பரிமளிப்பது அவர் விளையாட்டின் மீது கொண்ட லயிப்பினால் என்றே எண்ணத் தோன்றுகிறது. எமது பாடசாலையில் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியென்றால் அவரில் தோன்றும் சுறுசுறுப்பு, வேகம், மகிழ்ச்சி, மைதானத்தில் பங்காளனாகும் தன்மை போன்ற பண்புகள், ஆசிரியர் அனைவரையும் களைகட்டவைத்துவிடும். இதனாலன்றோ பாடசாலையின் விளையாட்டுப்போட்டி பலராலும் பேசப்படும் நிலையை எட்டியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டுக் கல்விக் குறிக்கோள்களில் உடற்பயிற்சியுடன் கூடிய விளையாட்டும் ஒன்றாகும். பாடசாலை மட்டத்தில் மட்டுமன்றி வலயம், மாவட்டம், மாகாணம், தேசியரீதியலான விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றமைக்கு அதியர் அவர்களின் விடாமுயற்சியும் ஊக்கமுமே காரணமெனலாம். விளையாட்டின் உச்சப்பயனைப் பெறும் பொருட்டு, திறன்களை வளர்க்கும் நோக்குடன் அவ்வப்போது பழைய மாணவர்களின் உதவிகளைப் பெற்று சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருந்தாரென்பது மறுப்பதற்கில்லை. விளையாட்டில் அதிபரின் வகிபாங்கைக் கூறிக்கொண்டே செல்லலாம்.

மேலும் எமது அதியர் திரு. இராஜநாதனின் சேவை எமது சமூகத்திற்கும், நாட்டிற்கும் என்றும் தேவை என்று கூறுவதோடு எமது மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய அதியர் அவர்கள் என்றும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

திருமதி. ந.பரமேஸ்வரன் - ஆசிரியர்
தி/பெருந்தெரு வின்நேஸ்வர ம.வி

# முன்னாள் அதியரின் ஆதரவில் பெண்கள் சாரணியம்

ஒரு மனிதனின் வாழ்வு பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிவடைகிறது. அத்தகைய மனிதன் குழந்தை, இளைஞர், முதியோர் என்ற பருவங்களைப் படிப்படியாகக் கடந்து வருகின்றான். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு ஆல விருட்சத்தைக் கொள்ளலாம். களைத்து வருவோர் அந்த மர நிழலில் சுவாத்தியமாக ஓய்வெடுக்கும் போது அவனது உள்ளக் கிடக்கையை விபரித்திட முடியாது. அந்த வகையில் தான் எமது அதிபர் திரு.நா.இராஜநாதன் அவர்களும் தமது உள்ளக் கிடக்கையை மாணவர்களுக்கு அர்ப்பணித்து ஒரு ஆளுமை படைத்த மாணவ சமுதாயத்தை உருவாக்கியுள்ளார். அத்தகைய பெருமை படைத்தவர் அவர்.

பாடசாலையின் பற்பல சேவைகளில் காலடி வைத்தாலும் பெண் சாரணியத்திற்காக ஆற்றிய பணியை அளவிட முடியாது. 1996ம் ஆண்டு சாரண இயக்கமும், 1998ல் குருளைச் சாரண இயக்கமும், 2004ம் ஆண்டு பெண்கள் சாரண இயக்கமும் தோற்றம் பெற்றது.

ஒரு குழந்தை என்றும் புத்தப்பூச்சியாக இருந்து விடக்கூடாது மாணவர்கள் இணைப்பாட விதான செய்பாடுகளின் ஈடுபட வேண்டும். அப்போது தான் ஒரு குழந்தை பூரணத்துவம் அடைகின்றது என்பதனை தன் சிறார்களுக்கும் ஆசிரிய ஆசிரியர்களுக்கும் எடுத்துக்கூறி மாணவிகளையும் ஆசிரியர்களையும் உற்சாகபடுத்தி இந்த சாரணியத்தில் ஈடுபடச் செய்தார்.

இன்று சமூகத்தை ஒரு கணம் எடுத்து நோக்கின் அளவிட முடியாத இன்னல்களுடன் பிள்ளைகள் பாடசாலைக்கு வருகிறார்கள். இவர்களுக்கு உதவ முன் வருவோர் மிகவும் குறைவு. நல்ல மனநிலைகளை வளர்க்க சாரணியம் உதவுகிறது. இதை அடிக்கடி வலியுறுத்துவது அவர்களின் வழக்கமாயிருந்தது.

இப்பாடசாலையில் எல்லா மாணவர்களும் சமமான முறையிலேயே மதிக்கப்படுகின்றனர். மாணவர்களை உற்சாகப்படுத்தி அவர்களைச் செயற்பாடுகளில் பங்கு பெறச்செய்வதில் அவரின் பங்கு அளவிடற்கரியது. கல்வி நடவடிக்கைக்கு கொடுக்கும் முக்கியத்துவம். சாரணிய பயிற்சிக்கும் கொடுபட வேண்டும் என்று கூறும் பெருமை இவரையே சாரும்.
சாரணிய மாணவிகளுக்கு பயிற்சி கொடுக்கும் போது அவர்களின் ஒழுக்க நடவடிக்கைகள் சரியான முறையால் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதையும் கண்காணித்து கொள்வார். அதனையும் நாம் மறந்துவிடவில்லை.

சாரணியப் பயிற்சி நிறைவுற்ற மாணவிகளுக்கு பயிற்சிக்கான சின்னம் சூடுவதற்கும் அவர்களுக்கான ஆடைகள், அதனை நடாத்துவதற்கான செலவுகள் என்பவற்றையும் எமக்கு வழங்கி பூரண ஒத்துழைப்பு தருவதும் வழமை. இடைக்கிடையே முதல் பயிற்சி கொடுத்த மாணவிகளை மட்டுமல்ல புதிய புதிய மாணவிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணியத்தின் நிலைப்பாடு எந்தநிலையில் உள்ளது போன்ற விடயங்களை ஆசிரியர் ஒன்றுகூடலின் போது அடிக்கடி கேட்கவும் மறந்து விடவில்லை. இவ்வாறு எல்லாம் எடுத்துக்கூறி உற்சாகம் கொடுத்து இப்பாடசாலையில் சாரணிய பயிற்சி பெற்ற மாணவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தவரும் அவரே.

சாரணிய ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளில் பங்கு பற்றவும், ஆசிரியர்கள் பூரணப் பயிற்சியைப் பெறவும் உரிய காலத்திற்கு எமது அனுமதி தந்து எம்மைப் பயிற்சியில் கட்டாயம் பங்களிப்புச் செய்யுமாறு எடுத்துரைப்பதுடன், இந்த பயிற்சிப் பட்டறைகளில் பங்கு பற்றுவது மாத்திரமல்ல மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் எடுத்துரைப்பார். பாடசாலை வளவில் மாத்திரமன்றி வெளி இடங்களுக்கும் மாணவிகளை அழைத்துச் சென்று கூடாரம் அமைத்து பயிற்சிப்பட்டறைகளில் கலந்து தங்களிடம் உள்ள மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக் கொணர எமக்கு ஆதரவு வழங்கியமையும் அவரையே சாரும். பயிற்சிச் சான்றிதழ்கள், வெற்றிக்கேடயங்கள் என்பன எம் அதிபர் சாரணியத்திற்கு முன்நின்று உற்சாகத்தை அளித்தமைக்கான சான்றுகளாகவே உள்ளன.

அதிபர் அவர்கள் ஓய்வுபெற்று சென்றாலும் சாரணியத்திற்கு தொடர்ந்தும் அவருடைய ஆதரவை தரவேண்டும் என்று கூறி கோணேஸ்வரரின் பாதம் பணிந்த நல்வழி காட்டும் மானிடனாக திரு.ந.இராஜநாதன் அதிபர் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகிறோம்.

திருமதி. சா.பார்த்தீபன்
ஆசிரியர்
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்

# Vote of Appreciation

We are glad to contribute this message to the special souvenir of Vigneswara M.V, Which is to be released for the farewell of former Principal Mr.N. Rajanathan and also we wish to signify his sense of Leader ship and share it them with you all.

Leader ship is a precious and rare quality. It is acquired through experience or the development of the personality. It guides us towards higher things such as self management and self discipline which are the base of Leader ship. It leaves a path to the unity. Unity in action rather than commands determines the succeess of work and you become popular among others as well. It gives satisfaction.

Our former Principal is a good example for Leader ship. He is a good administrator and he has completed fourteen years of his dedicated service as a Principal at Vigneswara M.V. He is considered as a Pillar of the institution and his untiring efforts and devoted, uninter rupted service uplift the standard, fame and beauty of our existing noble institution and we are proud of its achievements in both academic and non academic activities each year.

Our English Unit has conducted English day, English week, English Literary Assosication and Library Week every year under his super vision, We maintain the team spirit and sense of responsibility the years with hardwork. Our English competitions approach cluster to district levels. and also there is an acceler ation in the G.C.E O/L result in every year. It is obvious, that this endeavour has enhanced the progress of each student in our school.

We thank our former Principal for his worthy vibrant service rendered to our school and wish him for his peaceful bright future. We kindly request him to maintain the same spirit and sense of attention to the progress of our school in the ingoing years.

**- English Unit -**
**T/Vigneswara.M.V**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போதைய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன்
ஓய்வு பெற்ற அதிபர் திரு.நா.இராஜநாதன் அவர்கள்



பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், கல்விசாரா ஊழியர்களுடன்
ஓய்வு பெற்ற அதிபர் திரு.நா.இராஜநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.நா.இராஜநாதன் அவர்களின் தலைமைத்துவம்

தலைமைத்துவம் எனப்படுவது நிறுவனத்திலுள்ள அனைத்துத் தரப்பினரையும் வழிநடத்தி அவர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பை பெற்று அதனூடாக நிறுவனத்தின் நோக்கத்தை அடைய முற்படும் ஓர் செயற்பாடு

ஒரு பாடசாலையின் அதிபர் ஒழுங்கமைப்பு ஆளுமை, தனது வலு மூலம் பிறர் மீது செல்வாக்கினைச் செலுத்தி அவர்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் ஆகிய தலைமைத்துவப்பாங்கினை மேற்கொண்டு மாணவர்களிடமும் அத் தலைமைத்துவப்பாங்கினை ஏற்படுத்துதல் வேண்டும்.

மாறி வரும் உலகில் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய மாணவர் சமதாயத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பு பாடசாலைக்கே உரியது.

எமது பாடசாலையில் பல வருடங்கள் அதிபராக இருந்து மாணவர்களை சிறந்த தலைமைத்துவ ஆளுமை உடையவர்களாக உருவாக்கும் பாரிய பொறுப்பை திரு. இராஜநாதன் அதியர் ஆற்றியுள்ளமை கண்கூடு. 60 வயதை எட்டிப் பிடித்திருக்கும் எங்கள் அதிபர் வெள்ளாடையில் வருவது இருப்பது மனத்தூய்மையை மாணவர் மனத்திலும் உட்புகுத்துவது அவருடைய தலைமைத்துவப் பண்பு என்றால் மிகையாகாது.

தலைமைத்துவச் செயற்பாட்டில் அவர் எடுக்கும் சிரத்தைக்கு நேரம் காலம் இல்லை. இரவு பகல் பாராது மாணவர்களை தலைமைத்துவத் செயற்பாடுகளில் தயார்ப்படுத்தி சிறந்த தலைவர்களை உருவாக்கிய பரிணாமம் பாடசாலையில் நடைபெறும் விழாக்களின் போது மாணவ தலைவர்களின் செயற்பாடுகளில் இருந்து அறிய முடிகிறது.

எமது பாடசாலையினைப் பொறுத்தவரை பொருளாதார நிலையில் பின் தங்கிய நிலையில் உள்ள மாணவர்களே அதிகம் உள்ளனர். இம் மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து அவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக அதிபர் அவர்கள் அரும்பாடுபட்டு உழைத்தார்.

பாடசாலையில் இடம்பெறுகின்ற எக்கருமமாயினும் அங்கு மாணவர்களுடன் அவரும் இணைந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் முன்னுதாரணமான பண்புக்கு நிகர் அவரேதான்.

மாணவர்களுக்கு சிறந்த விழுமியங்கள், ஒழுக்கங்களுடன் சேர்ந்த கல்வியும் பெறுபேறுகளும்தான் முக்கியம் என்பதை மாணவர்களுக்கு அடிக்கடி வலிறுத்திக் கொண்டிருப்பதுடன் வழிகாட்டல் ஆலோசனை, வருடாந்த ஒன்றுகூடல் வைபவம், உயர்தர மாணவர்களின் ஆளுமை விருத்தி, தலைமைத்துவப் பண்பு விருத்தி, உயர்தர ஒன்றியத்தின் வினைத்திறனான செயற்பாடுகள், மாணவர்களின் முகாமைத் திறன்களை மேம்படுத்துதல் மிகுந்த அக்கறையுடனும் திறமையாகவும் செயற்பட்டார்.

ஆசிரியர்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆசிரியரினதும் பெறுமதி அடையாளத்தினைக் கண்டு அதற்கேற்ப முகாமைத்துக் கருமங்களை வழங்கி அவர்கள் அச் செயற்பாடுகளில் சிறப்பாக இயங்கி பாடசாலையினை ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக காட்டக்கூடிய வகையில் உருவாக்கும் பண்பினைக் கொண்ட முதல்தர முகாமையாளராக செயற்பட்டார் எங்கள் அதிபர்.

திருமதி. ர.கங்காதரன்
தி/பெருந்தெரு விக்னேஸ்வர ம.வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை தந்திட்ட அருந்தனையன்

வள்ளம் மலி நகரும் ஓம் எனும் ஓங்கார ஓசையுடையதும் சிவபூமி என திருமூலரால் பாடப்பட்டதுமான திருக்கோணமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருந்தமிழன் திரு.இராஜநாதன் நின் புகழ் நான் இயம்ப என் அனுபவமும் வயதும் இடம் கொடுக்கா இருப்பினும் ஆசைக்கு யார் அடிமை ஆகவில்லை அந்த வகையிலே பன்னிரு மாதங்கள் தங்களுக்கு கீழ் பணியாற்றியவள் என்ற வகையில்

சிறுபிள்ளையை மண் விளையாட்டிலே தெரியும் என்பது முதுமொழி அந்த வகையிலே பண்டு முதலே நல்ல பழக்க வழக்கங்களோடு வாழ்ந்தவர் எம்மதிபர். தனது ஆரம்பக் கல்வியை திருமலை/ புனித பிரான்சிஸ் சவேரியர் மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை திருமலை/இராம கிருஷ்ணமிசன் கோணேஸ்வரா இந்துக்கல்லூரியிலும் உயர்தரக்கல்வியை மட்/இந்துக்கல்லூரியிலும் கற்றார். அதன் பின் சமூகத்தை நல்வழிப்படுத்தும் ஆசிரியர் சேவையிலே 1973.15.10 கணித ஆசிரியராக தன்னை அர்பணித்துக் கொண்டார். 1979 - 1982 வரையான காலப் பகுதியிலே மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலே ஆசிரியர் பயிற்சி கலா சாலையில் விசேட பயிற்சியாக கணிதத் துறையில் பயிற்சியை இனிதே நிறைவு செய்து திருமலை இந்துக்கல்லூரியில் தனது சேவையை தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையிலே இவரின் தேவையை அறிந்த கல்வித்திணைக்களம் கணிதப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக பதவி வழங்கியது அந்த பதவியில் இருந்த காலத்தே கணித ஆசிரியர்களுக்கு பல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியது. மட்டுமல்லாமல் மாணவர்களது கல்வி நடவடிக்கையிலும் ஈடுபட்டார். இதன் பின்பு அன்புவழிபுரக் கலைமகள் வித்தியாலயத்திலே 1992 - 1996 வரை அதிபராக கடமையாற்றி சிறந்த நிர்வாகி என்ற நன்மதிப்பை பாடசாலையில் மட்டுமல்ல மக்கள் மத்தியிலும் பெற்றுக்கொண்டார்.

கால வெள்ளோட்டத்தில் இவரது ஆற்றலை அறிந்த கல்வி மான்கள் இவரை தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலத்தில் அதிபராக நியமனம் செய்துள்ளார்கள் அன்று முதல் அயராத சேவையை இச் சமூகத்திற்கு அள்ளி இறைத்தார். ஓர் சமூகத்தை ஒழுங்கமைப்பது என்பது இலகுவான விடயம் அல்ல அதிலும் இங்கு கல்வி கற்கும் மாணவர்களில் அனேகர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர் ஆவார். இதனைக் கருத்திற் கொண்டு அச் சமூகமாணவர்களை நல்வழிப் படுத்திய ஒரு சமூக சீர்திருத்த வாதி என்று கூறினால் அது மிகை இல்லை. மேலும் இவர் இச் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் மடைதிறந்த வெள்ளம் போல் பல அவற்றுள் சில உங்களுக்காக...

பிறந்து விட்டோம் வாழ்ந்து முடிப்போம் என்ற எண்ணம் இல்லாமல் தான் வாழும் காலப் பகுதியில் இச் சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் ஏதாவது நன்மை தரும் விடயங்களை செய்ய வேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்டது மட்டும் அல்லாமல் அதை செயலிலும் காட்டிய செயல் வீரர். அந்த வரிசையிலே

அகில இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்திலே 1982லே இணைந்து கொண்டு ஆரம்பத்தில் பொருளாளராக கடமை ஆற்றி அதன் பின் தலைவரானார் இவர் இப் பதவியில் இருந்த காலத்தே தமிழர் ஆசிரியர்களுக்கு பல பயன் தரும் விடயங்களை செய்துள்ளார். அவை இடமாற்றம் என்பது ஆசிரியர்களை உளரீதியாக பாதித்த ஓர் விடயம் மாவட்ட/ மாகாணங்களுக்கு இடையே ஏற்பட்ட சீரற்ற இடமாற்றங்களை சீரான முறையில் கொண்டு வர வலய இடமாற்ற சபைக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கிய சிறந்த ஆலோசகராகவும் செயற்பட்டவராவார். மற்றும் அரசாங்கத்தால் தீர்த்து வைக்கப்படாத ஆசிரியர்களின் பிரச்சனையை தனது குழுவுடன் முன்னின்று அப்பிரச்சனைகளை தீர்த்துவைத்தவராவார். மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர் நிதியம் மூலம் பெற்றோரை இழந்து போரிலே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விச் சேவையை வழங்கியதோடு மட்டுமல்லாமல் அம்மாணவர்களின் வருங்காலத்தேவை கருதி அவர்கள் ஒவ்வொருவருக்குமான தனியான வங்கிக் கணக்குகளையும் ஆரம்பித்து வைத்தவர். தொடர்ந்து மாணவர் நலன் புரிச் சங்கத்தின் போசகராகவும், சிறுவர் இல்லங்களின் நிர்வாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களில் உறுப்பினராகவும் அங்கம் வகித்து அம்மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றியவர். இது மட்டுமா? இவர் சமயத்துக்காகவும் தனது சேவையை வழங்கத் தவறவில்லை. இன்றும் கூட கும்பத்துமால் கருமாரி அம்மன் ஆலய பொருளாளராக இருந்து இந்து மக்களுக்கும் தனது சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

விசேட கல்வியிலே எம்மதிபர்

2007 ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட விசேட கல்விக்கு தனது முழு ஆதரவையும் நல்கினார். சில வேளைகளில் என்ன பல வேளைகளிலே அம்மாணவர்களோடு தானும் ஒருவராக மாறி அவர்களின் சின்னச் சின்ன தேவைகளை கூட நிறைவு செய்வார். அது மட்டும் அன்றி அம்மாணவர்களின் கல்விசார், கலைசார் ஏனைய விளையாட்டுசார் துறைகளிலும் தனது ஒத்துழைப்பை நல்கி விசேட கல்வியை விசேடமாக்கிய பெருமையும் இவரையே சாரும். மற்றும் இப்பாடசாலை ஆனது உடபடுத்தல் கல்விக்கு உட்பட்டபாடசாலை என மாறுவதற்கு எம்மதிபரே வித்திட்டார் என்றால் அது பொய்யில்லை. நிர்வாகத்தை பொறுத்தவரை ஒரு தந்தை என்று தான் கூறவேண்டும். சிலர் தலைவர்களாகவே பிறக்கின்றார்கள் சில தலைவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். எம்மவர் தலைவராக உருவாக்கப்பட்டவர். அன்பும் சேவை மனப்பாங்கும் கொண்ட இவரின் சேவை இப்பாடசாலையை விட்டுப் போனாலும் இவரின் சேவை எமக்கு என்றும் தேவை. அதுமட்டும் அன்றி...

அன்புதனைக் கொண்டு அறங்கள் பல புரிந்து தன்னுயிர் போல் மண்ணுயிரைத் தானினைத்து - மண்ணுயிர்க்கு நன்று பல புரிந்து முதுமை வந்திடினும் என்றும் இளமை இவர்க்கு என்று கூறுவதோடு இவர் இன்னும் பல காலம் வாழ எல்லாம் வல்ல கிருஷ்ண பகவான் அருள் புரிவாராக...

ஆக்கம்
திருமதி.S.அருள்பிரகாஷம்
விசேட கல்வி
தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகாவித்தியாலயம்
திருக்கோணமலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதோடு உறவாகும் அதிபர் ... ... ...

மாற்றம் அல்லது புரட்சி மனித வரலாற்று இயங்கியல் போக்கை வலுவூட்டியுள்ளது. 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மனிதன் கைகளில் மூலம் பொருட்களை உற்பத்தி செய்யும், முறையினின்றும் முன்னேறி உபகரணகளை பயன்படுத்தி உற்பத்தி செய்ய புறப்பட்டமையை கைத்தொழில் புரட்சி என்கின்றோம். கைத்தொழில் புரட்சிக்கு பின்னர் மனித உளவியல் சிந்தனை கருத்துக்களும், மனித வாழ்வின் அம்சங்களை ஆராய்விற்கு உட்படுத்துகின்ற சிந்தனை போக்கும் வளர்ந்ததை அவதானிக்க முடிகிறது.

அறிவு என்பது எப்பொழுதும் நிறைவு அடையாதது. எந்த ஒரு கட்டத்திலும் மனிதருக்குரிய அறிவு முழுமை அடையாததாக அதாவது சார்பு நிலைப்பட்டதாக இருக்கும் புற உலகம் தொடர்ச்சியாக மாறிக்கொண்டு இருப்பதனால் இன்று மனிதர் சரியென்று கொள்ளும் கருத்துக்கள் நாளை தவறாக மாறலாம். இன்றைய தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக கண்ணிமைக்கும் நேரத்தில் கணத்துக்கு கணம் உலகமாற்றம் விரைந்து நடைபெற்று வருகின்றது.

கல்வியை சமூக நோக்கு வயப்படுத்துமுகமாகவும், நமது மாணவர்களை குறிப்பாக எதிர்கால சந்ததியினரை பன்முகத் தன்மையுடன் வளர்க்க வேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டவர். தி./ விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் செயல் ஒழுங்கை தனது அறிவாலும், ஆற்றலாலும் மாற்றியமைத்துக் காட்டியவர். சாதாரண மக்களோடும், ஆசிரியர்களோடும் இயல்பாக எளிதில் சந்தித்து உரையாடக்கூடியவராகவும், தனக்கு சரியென்று தெரிந்ததை அச்சமின்றி எடுத்துக் கூறக் கூடிய பண்பினர். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளும் ஆளுகை தன்மை படைத்த நிறைவேற்று அதிகாரியாகவும் திகழ்ந்தார்.

அவர் அதிபராக பணிபுரிந்த பாடசாலைகளில் எல்லாம் நமது மொழி, பண்பாடு, கலாச்சார விழுமியங்களை மாணவர்கள் கடைப்பிடிக்க நெறிப்படுத்தி முன்னாள் அதிபர் திரு.ஆர்.இராஜநாதன் அவர்கள் ஆழிகடல் சூழும் மலை ஊராம் எங்கள் ஈழப்புகழ் கூறும் திருக்கோணமலை மக்களிற்கும், மண்ணிற்கும் பணியாற்ற நோயற்ற உடலும், திடமான மனவலிமையும் கிடைக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.


சி.நந்தகுமார் ஜே.பி
ஆசிரியர், நகராட்சி மன்ற உறுப்பினர்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NECORD நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக் கட்டிடத்தின் ஒன்று கூடல் மண்டப திறப்பு விழாவில் உயர் அதிகாரிகளுடன் எமது அதிபர்.



இலங்கை தமிழர்ஆசிரியர் சங்கத்தின் தலைவராக ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச 7வது ஆசிரியர் தின நிகழ்வின் போது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது முன்னாள் அதிபரின் இன்டரக் கழகச் சேவையில் ஒரு கண்ணோட்டம்...

தெட்சன கைலாயம் என போற்றப்படுகின்ற திருக்கோணமலையிலே விக்கினங்களை தீர்க்கும் விநாயகரின் மறுநாமமான விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் அகவை அறுபதை தாண்டி மணி விழாக் காணும் அரங்கவிளை நிலத்தின் வித்தகரும் எமது அதிபரும் ஆகிய திரு. ந. இராஜநாதன் அவர்களின் இன்டரக் கழகச் சேவையில் ஒரு கண்ணோட்டம்

"மனித சக்தி அவன் மனத்திலேதான் உள்ளது. வெளியில் ஒன்றும் இல்லை. மனத்தில் ஏதாயினும் ஓர் உயர்ந்த நோக்கம் இருக்க வேண்டும். வாழ்க்கை அதை நிறைவேற்றிச் செல்ல வேண்டும்" என்ற சுவாமி விபுலானந்தரின் கூற்றுப்படி வாழ்ந்து காட்டியவர் எமது அதிபர்.

எமது அதியர் 1997ம் ஆண்டில் இருந்து அவர் ஓய்வு பெறும் வரை (2011) எமது கழகத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அரவணைத்து வந்தார். அவருடைய சேவைகள் அளப்பரியன. வலது கை கொடுப்பதை இடது கைக்கே தெரியாத வண்ணம் அவரின் செயற்பாடுகள் இருந்தன.

மாணவர்களிடையே தானும் ஒரு மாணவனாக நின்று பாடசாலையையும் அதன் சூழலையும் அழகு படுத்துவதற்காக அரும் பாடுபட்டார். பாடசாலையின் வெளிப்புற மதில் உட்சுவர்கள், வகுப்பறைகள், கரும்பலகைகள், மாணவர் ஆசிரியர் கதிரை மேசைகள் போன்றவற்றுக்கு வெள்ளையடித்தல், மை பூசுதல் போன்ற செயற்பாடுகளில் கழக மாணவர்களை ஈடுபடுத்தினார். காலை, மாலை என எந்நேரமும் பாடசாலைக்குள்ளேயே நின்று செயற்படுத்தினார். இச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களை பாடசாலையுடன் நெருக்கத்தை ஏற்படுத்த எமது சொத்தை நாமே பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

பாடசாலையின் உள்ளே அழகான பூமரங்களை நாட்டி அழகுபடுத்தினார். "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் நான் வாடினேன்" என்ற வள்ளலாரின் வாக்கிற்கு ஏற்ப பயிர்களை வாடவிடாது நீர் வழங்கியும் அவற்றை தகுந்த முறையில் பராமரித்து பாதுகாத்தார். எமது இன்டரக் கழக மாணவர்களின் செயற்பாடுகளான வகுப்பறைகளை அழகுபடுத்துதல், உடைந்த கதிரை மேசைகளை திருத்தி மீள்பாவனைக்கு உட்படுத்துதல் தபோவனம் போன்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், முதியோர் இல்லங்கள் போன்றவற்றிற்கு உணவு, உடை வழங்குதல் சிரமதானத்தின் மூலம் இல்லங்களை தூய்மை படுத்துதல், பாடசாலையை சூழவுள்ள ஆலயங்களை தூய்மை படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு மிகவும் உறுதுணையாக நின்று மாணவர்களை நல்வழிப்படுத்தினார்.

சிறுவர்கள் விளையாட ஒரு சிறுவர் பூங்காவினை எமது கழகத்தின் ஊடாக அமைத்து சிறார்களின் எண்ணங்களை சிறகடிக்க வைத்தவர். அதனை தொடர்ந்து அப்பூங்காவினை ஒழுங்காக பராமரித்து வந்தமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இன்டரக் கழக மாணவரிடையே பொதுஅறிவுப் போட்டியினை நடாத்தி பரிசில்களை வழங்கி மாணவர்களிடையே அறிவு, திறனை வளப்படுத்தியவர். "தரமான உள்வீடுகள் மூலமே தரமான வெளியீட்டை பெறமுடியும்" என்பதற் கேற்ப ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு உதவியதுடன் ஆசிரியர் தின விழாவினை இக்கழகத்தினூடாக வருடம் தோறும் நடாத்தி ஆசிரியர்களை மேன்மேலும் மிளிர வைத்தவர்.

வாசிப்புப் பழக்கத்தை மாணவர்ச் சமுதாயத்தில் மேம்பட வைக்க வேண்டும் என்ற நோக்கிலே பழைய புத்தகங்களைச் சேகரித்து நூலகத்திற்கு வழங்கி தரமான கற்றல் நிலையத்தை உருவாக்கியவர்.

இன்டரக் கழகத்திற்கு என ஒரு கடித முகவரியைக் கொடுத்தார். எமது பாடசாலையின் பிரதான மண்டப மேடைக்கான அலங்கார திரை, பான்ட் (BAND) வாத்திய குழுவினருக்கான உடை போன்றவற்றை செய்து திருக்கோணமலை வலயத்திலே தரமான கழகமாக உருவாக்கினார். அது மட்டுமன்றி மாணவர்களின் ஆளுமை, தலைமைத்துவப் பண்பு போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு இன்டர் கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பாசறை ஒன்றை அமைத்து சிறந்த பண்புகளையும் விழுமியங்களையும் உருவாக்கியதை என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும்.

"இதனை இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற பொய்யா மொழிப்புலவர் வாக்குப் படி இன்டரக் கழகத்தினையும் வைத்து எம்மையும் பெருமைப்படுத்தியுள்ளார். எமது அதியர் திரு.இராஜநாதன் ஐயா அவர்கள் எமது கழகத்திற்கு வழங்கிய ஆதரவும் செயற்பாடுகளில் ஈடுபட்ட விதமும் போற்றுதலுக்குரியது என வாழத்துகின்றோம்.

"தங்மிடம் தோறும் அவர் புகழ் நின்று நிலைத்திடல்"

இன்டரக் கழக
மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தனுக்குரிய முக்கியத்துவம்.

சிறுகதை இலக்கியம் உலக மொழிகள் அனைத்திலுமே முக்கியமான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. இதற்கு காரணம் உலகெங்கிலுமே மக்களிடையே கதை கேட்கும் ஆர்வம் எல்லாக்காலத்திலும் எல்லா மொழிகளிலும் மிகுதியாக இருந்து இலக்கியத்தைப் பேணி வந்திருக்கின்றது. பலநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாய்மொழி இலக்கியமாகச் சிறுகதை இலக்கியம் பயில ஆரம்பித்துப் பிறகு எழுத்து வடிவத்திலே நிலையான முக்கிய இடத்தை வகிக்கத் தொடங்கியிருக்கின்றது. சிறுகதையின் தோற்றத்தை எடுத்தால் தமிழில் சிறுகதை தோன்றவில்லை. இச்சிறுகதை இலக்கியமானது மேலைத்தேய இலக்கிய வடிவங்களிலிருந்தே தமிழுக்கு வந்தது. இது ஐரோப்பாவிலிருந்து தமிழுக்கு புனைகதையாகவே கிடைத்தது. புனைகதைகளாக நாவலும் சிறுகதையும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஐரோப்பாவில் ஆங்கில நாவல்கள் தோன்றி நூறு ஆண்டுகள் கழித்தே தமிழில் நாவல் எழுந்தது. தமிழில் நாவல் தோன்றி ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரே சிறுகதை தோன்றியது.

தமிழில் சுப்பிரமணியபாரதியார், மாதவய்யா, வா.வே.சு.ஐயர் ஆகியோர் சிறுகதை எழுதுவதில் முதன்முதலாக ஆர்வம் காட்டினர். பாரதியின் கதைகளை எடுத்தால் அவை சிறுகதையாக சொல்ல முடியாது. அங்கு கவிதைக்கு இருந்த உணர்வோட்டத்தை காணமுடியாமல் இருந்தது. இதனால் இவரை வ.வே.சு.ஐயருக்கு பின்னாலேயே வைத்துப் போற்றப்படுவதைக் காணலாம். அ.மாதவய்யரின் சிறுகதைச் சம்பவத்தை கோவையாக சொல்வனவாக காணப்பட்டன. இதனால் சிறுகதையின் உருவமும் உள்ளடக்கமும் சிதைவடைந்ததை அவதானிக்க முடிந்தது. இவர்களின் பின் "குளத்தங்கரை அரசமரம்" மூலம் வ.வே.சு.ஐயர் சிறுகதைக்கு வருகின்றார். இவர் உருவம் உள்ளடக்கம் எடுத்துச் சொல்லும் முறையில் சிறுகதையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார். இதனால் எடுத்துச் சொல்லும் முறையில் சிறுகதையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார். இதனால் சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படுகின்றார். இவர்கள் மூவரும் 1925 இற்குள் தங்கள் உலக வாழ்வை முடித்து 1933 வரை சிறுகதை வரலாற்றில் ஒரு இடைவெளியை உண்டுபண்ணினர். தொடர்ந்து தமிழிற் சிறுகதையில் சிறந்த எழுத்தாளராக புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபால், மௌனி, வ.சா. ராசமிர்தம், கு. அழகிரிசாமி, ஜெயகாந்தன் ஆகியோர் கணிக்கப்படுகின்றனர்.

தமிழ் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தன் பெறுகின்ற முக்கியத்துவத்தினை நோக்கினால் தமிழ் நாட்டைச் சேர்ந்த புதுமைப்பித்தன் பாரதிக்குப் பின் தோன்றிய இலக்கிய ஆசிரியர்களுள் ஓர் மேதை எனப் பேராசிரியர் வி.செல்வநாயகம் குறிப்பிடுகின்றார். 1906 இல் பிறந்த இவர் 1933 இல் "சாளரம்" என்ற சிறுகதையுடன் எழுத்துலகுக் சிறுகதை எழுத்தாளனாக ஆரம்பித்தாலும் 1934லில் இருந்து 1946வரைதான் இவரது சிறுகதை எழுத்துலகை நோக்கலாம். கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்குள் 102 சிறுகதைகளை எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளின் முக்கியத்துவத்தை நோக்குவோம்.

1930 இன் பின்னரே இந்திய சுதந்திர இயக்கம் பேருக்கத்துடன் பரந்தது. இது அரசியலில் ஆங்கில எதிர்ப்பாகவும் சமூகத்தில் சாதி ஒழிப்பும் சமூகப் புனரத்தாரண இயக்கமாகவும் அமைந்தது. இந்த இயக்கத்திற்கும் செயலுக்கும் வேறுபாடு இருந்தது. அந்த உண்மை நிலையை வேறு எந்த இலக்கிய ஆசிரியரும் இலக்கியப் பொருளாக கொள்ளவில்லை. அந்த முரண்பாட்டு நிலையை முதலில் எடுத்துக்காட்டியவர் என்ற வகையில் புதுமைப்பித்தனுக்கு சிறப்பான இடமுண்டு.

அரசியலுள்ள போலி வேடத்தை விரக்தி மனப்பான்மையுடன் எடுத்துக்காட்டினார். அவர் வாழ்வில் இலட்சியத்திற்கும் யதார்த்த நிலைக்குமிருந்த இணைக்க முடியாத இடைவெளி காரணமாகவும் அவர் சமுதாய வாழ்வில் காணப்பட்ட யதார்த்த நிலையையும் மனித இன்னலையும் காண முடிந்தது. எனவே புதுமைப்பித்தனை அக்கால ஆசிரியரிடமிருந்து பிரித்துக் காட்டியது. அவர் கதைகளில் காணப்பட்ட யதார்த்தப் பண்பு ஆகும். அக்காலத்தில் யதார்த்தம் பொது இலக்கியப் பண்பாக இருக்கவில்லை. வசன இலக்கியங்களில் முதன்முதலில் யதார்த்த நிலையைப் புகுத்தியவர் புதுமைப்பித்தன் ஆவார்.

தமிழ் சிறுகதை வளர்ச்சியினை ஆராயும் பொழுது புதுமைப்பித்தன் முக்கியமானவராகத் தோன்றுவதற்கு முதற்காரணம் அவர் தம் இலக்கிய ஆக்கங்களை புனைகதைத் துறையளவில் வரையறுத்துக் கொண்டமையே ஆகும். புதுமைப்பித்தன் காலம் வரை தோன்றிய புனைகதை எழுத்தாளர்கள் அத்துறையே தமது விசேட இலக்கியத் துறையாக கொள்ளவில்லை. (வ.வே.சு. முதல் கல்கி வரை) சிறுகதை மூலம் தமிழ் இலக்கியத்தை வளர்த்தவர் இவர் என்றால் மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கொடி பத்திரிகையில் எழுதியவர்களில் ஒருவர் என்பதை விட ஒப்பற்ற ஒருவர் என்று சொல்வதே பொருந்தும் இவருடைய கதைகள் ஒவ்வொன்றும் ஒரு முக்கிய பிரச்சினையை கேள்விக்குறியாக வளைத்துப்போட்டு நிமிர்ந்து நிற்கக் கூடிய தனித்தன்மை கொண்டவை. சமூகத்தில் ஆணி அடிக்கிற கேள்விக் குறிகள் இவருடைய கதைகளாகக் காணப்படுகின்றன.

இவருக்கு முன் காதல் கதைகளும் பிரச்சாரக் கதைகளும் தான் வாசகர்களைக் கனவுலகில் ஆழ்த்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் இவர் தனது படைப்புக்கள் மூலம் நிதர்சன வாழ்வின் பிரச்சினைகளை எடுத்துக் காட்டினார். எதை எழுத வேண்டும் எதை எழுதக்கூடாது என்ற அன்றைய சமூக நியதிகளுக்கு இவர் குனிந்து கொடுக்கவில்லை. "சுமார் 200 வருடங்களாக ஒருவித சிலைப்பேன் வாழ்க்கை நடத்திவிட்டோம்" இனியாவது புதிய பாதையில் தைரியமாக எழுதுவோம் என்று தனது பயணத்தை தைரியமாகத் தொடர்ந்தார்.

நினைவோட்ட உத்தியைக் கையாண்டு சிறுகதைக எழுத தொடங்கியவரும் புதுமைப்பித்தனே குறிப்பிட்ட ஒரு உணர்வு வயப்பட்டு நிற்கும் நிலையுள் வாழ்க்கை முழுவதையும் அடக்கிவிடுவது இவ்விதியின் பண்பாகும். இவரது "கயிற்றரவு" என்ற சிறுகதையில் இவ்வுத்தியைக் காணலாம். அது மட்டுமன்றி சமுதாய யதார்த்தவாதப் போக்கும் இவரது கதைகளில் காணலாம். அதற்கு எடுத்துக் காட்டாகக் கணவனுக்கு பாற்கஞ்சி வார்க்கக் கற்பை விலைபேசும் அம்மாளை பொன்னகரத்தில் காணலாம்.

இவர் சிறுகதையுருவத்தில் பலவித பரிசோதனைகளை செய்தார். வாசகரை நேரடியாக விளக்கமளித்துக் கூறும் முறைமை முதல் நாடகம் போன்று காட்சிகள் தாமாகவே விரிந்து செல்லும் முறைமை வரை பலவித உத்திகளைக் கையாண்டார். குளத்தை அமைத்து அதன் பின்னணியில் பாத்திர இயக்கத்தை காட்டுவது திரைப்பட உத்தியாகும். இதனை அன்றிரவு, அகல்யை, பொன்னகரம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் போன்ற சிறுகதைகளில் காணலாம். இவரது வசனநடையில் நாம் காணும் சக்தி வாய்ந்த சொல்லாட்சி கதைகளில் காணும் விரகத்திப் பார்வை கிண்டல்தொனி என்பன சிறுகதைக்கு மேலும் சிறப்பைத்தருகின்றது.

ஐரோப்பிய மொழிகளின் உன்னதக் கலைப் படைப்புக்கள் பலவற்றை மொழி பெயர்த்துமிருக்கிறார். அம்மரபிலிருந்து சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தின் அடிப்படை இயல்புகளை உணர்ந்து கொள்ளவும் அந்த வடிவத்தின் வளைவு நெளிவுகளை தெரிந்து கொள்ளவும் அவரால் முடிந்தது. அதற்கு வேண்டிய மனப்பக்குவமும் ஒரு கலைஞரிடம் அமைந்திருக்க வேண்டிய உள்ளுணர்வும் இவரிடம் இருந்தன. அத்துடன் பன்முகப் பார்வை கொண்டது. இவரது உலகம் கடவுளானாலும் மனிதனாலும் ஒரே தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்பதை " கடவுளும் கந்தசுவாமிப்பிள்ளையும்" கதையில் காணலாம்.

தமிழ் இலக்கிய மரபில் சிறுகதையை கதைகூறும் முறையாலும் கதைப்பொருளாலும் இணைத்தவர் என்ற வகையில் இவர் சிறப்புப் பெறுகின்றார். இவரது அன்றிரவு சாபவிமோசனம் அகல்யை முதலிய தமிழிலக்கியக் கதைகளுக்கும் வரலாற்றுச் சம்பவங்களுக்கும் அமரத்துவம் கொடுத்தார். தமிழ் இலக்கிய சம்பவங்களுக்குப் புதிய கண்ணோட்டத்தில் பார்த்தார். இவரது கதைகளின் அடிப்படை உணர்ச்சி நம்பிக்கை விரகத்தியும் கசப்பும் அவரது பார்வையில் இயல்பாகவே அமைந்தன. இதற்குக் காரணம் இலக்கிய வாழ்வும் சொந்த வாழ்வுமே ஆகும். இவரது கதைகளில் தாவிச் செல்லும் நடையைக் கையாண்டு புரட்சிகர மாற்றத்தை மொழிநடையில் ஏற்படுத்தினார்.

புதுமைப்பித்தன் கதைகளில் காணப்படும் புதிய கருத்துக்கள், புதிய வடிவங்கள், புதிய உத்திகள், புதிய நடை, சமுதாயப் பார்வை என்பன எல்லாம் இவருடைய கதைக்குப் புத்தொளிதந்தன. தாம் காணும் காட்சிகளையும் தாம் கருதும் கருத்துக்களையும் சிறுகதை வாயிலாகத் தமிழர்களுக்கு உணர்த்த விரும்பினார். உணர்த்தியும் காட்டினார். என்றைக்கும் நிலைத்து நிற்கும் கதைகள் பலவற்றை நமக்கு எழுதித் தந்துள்ள செம்மையான இலக்கியச் செல்வங்களின் வரிசையில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய வல்லமை பெற்ற ஒரு மேதாவியாக இவரைக் குறிப்பிடலாம். இவரது கதைகள் 50 ஆண்டுகளுக்கு முன் எப்படிப் புதுமை தந்ததோ அப்படியே இப்பவும் புதுமை தருகின்றது. இனி 100 வருடம் சென்றாலும் அப்படியே இருக்கும் புதுமைப்பித்தன் என்ற கலைஞனைப் பெற்றுக்கொண்டதற்குத் தமிழ்ச் சிறுகதை மரபும் தமிழ் இலக்கிய மரபும் என்றும் பெருமைகொள்ளலாம் என்று கூறும் வகையில் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தனுக்கு முக்கியத்துவமுண்டு.

தமிழ்ப்பிரிவு
திருமதி.கி.சந்திரசேகரம்
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டின் மூலம் நிறை வாழ்வடைவோம்...

"விளையாட்டின் சட்டதிட்டங்கள் ஒழுக்க விழுமியங்கள் வாழ்வின் பெறுமதியை உணர்த்தும் அடையாளங்கள்"

தேர்ச்சி மிகு உலகில் பயணித்துக்கொண்டு இருக்கும் மனித வர்க்கம் தம் தேடலில் மூலமாக சாதனைகள் புரிந்திட முனைந்து கொண்டு இருக்கும் இத்தருணத்தில் சமூகம் எதிர்பார்க்கும் பூரணத்துவம் மிகுந்த பிரசையை உருவாக்குவதில் மாபெரும் சக்தியாக விளையாட்டுகள் திகழ்கின்றன.

விளையாட்டு என்பது வெறுமனே பொழுதைப் போக்குவதற்கு உருவாக்கப்பட்ட ஒன்றல்ல மாறாக உடல் உள சமூகரீதியான தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கும் ஒன்றாகும். இதனாலேயேதான் பாரதி "காலையில் எழுந்தவுடன் படிப்பு பின் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுவதும் விளையாட்டு என்று பாடியிருக்கின்றார்.

இயந்திர மயமாகிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் மறைந்து கொண்டிருக்கும் மனிதபண்புகளை தக்கவைக்கும் ஒரு காரணியாக விளையாட்டுக்கள் காணப்படுகிறது. என துணிவுடன் கூறலாம். விளையாட்டு வீரன் விளையாட்டின் சட்டதிட்டங்கள் ஒழுக்க விழுமியங்கள் சமூகப் பண்புகள் என்பவற்றை கடைபிடித்து தன்குழு வீரர்களுடனும் எதிர் அணி வீரர்களுடனும் நடுவர்கள் பார்வையாளர்களுடனும் ஆரோக்கிய மிகு தொடர்பை பேணுவதன் மூலம் தலைமைத்துவம் மிக்க மனிதனாக எதிர்காலத்தில் பரணமிக்க முடியும்.

தொடர்பு சாதனங்களும் சினிமா காட்சிகளும் கணணி விளையாட்டுக்களும் உலகத்தவர்களின் பொழுதை ஆக்கிரமித்தாலும் அவற்றால் எவன் ஒருவனும் சமூகமயமாகப் போவதில்லை ஆனால் விளையாட்டு மைதானங்களில் பொழுதைப்போக்கும் ஒரு வீரன் உடல் ரீதியான நலனையும் உள சமூகரீதியான பண்புகளையும் வளர்த்து கட்டுகோப்புடைய உயரிய சிந்தனையுடைய சமூகபற்று உறுதியுடைய பிரசையாக மகிழ்வுடன் தன் காலத்தை செலவு செய்யமுடியும்.

விளையாட்டின் மூலம் சிநேகமனப்பாங்கு ஆளிடைத்தொடர்பு சவால்களை சந்திக்கும் தன்மை, தலைமைத்துவம், விணைத்திறன் கூட்டு மனப்பாங்கு, திடமான உடல், என பல்வேறு நன்மைகள் விளைகிறது.

அண்மைக்கால ஆய்வுகளின்படி மனஅழுத்தங்களும், முரண்பாடுகளும், அதிகரித்த உடல் நிறைகளுக்கும் விளையாட்டில் இருந்து ஒதுங்கி இருப்பது ஓர் காரணமாக கூறப்படுகிறது. எனவே வீணர்களின் பேச்சில் மயங்கிவிடாமல் விளையாட்டில் ஈடுபடுவதால் கிடைக்கும் மேன்மை நிறைபண்புகளை அறிந்து தகமைகளை வளர்த்து விளையாட்டின் மூலம் நிறைவாழ்வு அடைவோம்.

அந்த வகையில் இப்பாடசாலையில் முன்னாள் அதிபராக இருந்த திரு. N. இராஜநாதன் அவர்கள் நிரந்தரமாக ஒரு உடல்கல்வி ஆசிரியர் இல்லா நிலையிலும் பாடசாலையில் விளையாட்டின் சிறப்பை வெளிப்படுத்தி மாணவர்களை அதில் ஈடுபடசெய்து தேசியரீதியில் விக்னேஸ்வர மகாவித்தியாலத்தின் பெயரை உயர்த்தியவர் இதற்கோர் சிறந்த உதாரணம் செல்வன் N.ஜெயதீபன் மூன்று வருடங்களாக தேசிய ரீதியில் பங்குகொண்டமை ஆகவே பாடசாலையில் அடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு மாணவர்களையும் கல்வியில் சாதனையாளராக்கும் அதேவேளையில் தேர்ச்சி மிகு பிரசையை ஆக்க உதவும் விளையாட்டு செயல் பாடுகளிலும் ஈடுபடுத்துவோம்.

க.யோகரெத்தினம் J.P
பழைய மாணவனும் 2008, 09
ஆண்டு பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச 7வது ஆசிரியர் தின
நிகழ்வில் ஏனைய நாடுகளின் ஆசிரியர்
சங்க பிரதிநிதிகளுடன்



எமது பாடசாலையின் விசேட தேவையுடைய மாணவர்களுடன்
கல்விச்சுற்றுலாவின் போது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வீர்

அலை எதிர்த்துக் கடல் கத்தும்
காவிய நகர் தனிலே
உடல் பிழிந்து உயிர் ஏற்றும்
கல்விதனை
கற்பதற்குக் கட்டிடங்கள்
கட்டி விட்டீர்

உங்கள் உடல் வலிந்து
உண்மையாய் தீர்த்து வைத்தீர்
தலை கடந்து அறிவோங்கி
தரணியால தனித்துவமான ஒரு
கல்விச்சாலை விக்நேஸ்வராதனிலே
உள்ள நல்ல அதியராய் உயர்ந்து நின்றீர்

ஆடையில் மட்டுமல்ல உம்
பண்பிலும் வெண்மைகாட்டி
ஆழ்ந்த நல் அமைதியால்
அதியர் கடமையாற்றி நின்றீர்

அன்பில்லப் பிள்ளைகளை
அன்போடு அரவரணைத்தீர்
அகவை அறுபது ஆகியும் ஆற்றல்
மிக்க அதிபராய் அயராது பாடுபட்டீர்
ஆண்டு பல்லாண்டு சீர்கல்விச் சேவைதனில்
திருமலைப் பதி அமர்ந்து சிறப்புற்ற
உங்களது சேவையில் நனைந்தவராய்
வாழ்த்துகிறேன் வாழ்வீர் ஐயா!

நன்றி
திருமதி. அ. செல்வரெட்ணம்

# எங்கள் அதியர்

சின்ன சின்ன பூக்களில்
சேர்த்து வைத்த தேன்துளியோ
உம் வார்த்தைகள்

ஆலமர இலையிலே அங்குமிங்கும்
அலைந்து திரியும் எறும்பின் குணமோ
உம் சுறுசுறுப்பு

புல்வெளியில் மிக வேகமாய் விழும்
பனித்துளியோ நீர் கூறும்
கடமை கட்டளைகள்

காலையிலே ஜன்னலின் அருகினிலே தெரியும்
சூரியனின் ஒளியோ
உம் அழகிய அன்புப்புன்னகை

மழை வரும் முன் மேகத்துள் ஒழியும்
நீலவானமோ
உம் கோபம்

எங்கள் விக்னங்களையெல்லாம் தீர்க்கும்
விக்னேஸ்வரரின் உருவமோ
எம் அன்பு அதிபரே உமக்கு

அ. அ. ஜீவப்பிரியா
12B கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழித்தினம் ஒரு கண்ணோட்டம்

வாழ்கை வாழ்வதற்கே! வாழ்கையை வளர்ப்பது, உருவாக்குவது எண்ணமே எண்ணங்களுக்கு ஊற்றுக்கள் சிந்தனை கற்ற நூலறிவும் சுற்றுப்புறங்களின் நிகழ்வுகளும் சிந்தனையில் தாக்கம் உண்டாகும் பொழுது அறிவு தலைப்படுகிறது. அந்த அறிவுக்குத் தாயகம் சிந்தனையே சிந்தனை இயக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் தாய்மொழியே துணை செய்யும்.

அந்த வகையில் எமது சிந்தனைக்குக் களங்கள் கிடைக்கின்றன. ஆதலால் சிந்தனைக்குரிய மொழி தாய்மொழியே. எங்கு சிந்தனை வளமாக இருக்கிறதோ அங்கு அறிவு வாழ்க்கையை வளர்க்கும் நமக்குத் தாய்மொழியே தமிழ் தமிழே நமது சிந்தனைக்குரிய மொழி. கல்வி பயில்வதற்குரிய மொழி அறிவுமொழி வாழ்கைமொழி வாழ்விற்கும் மொழி.

எனவே சிறப்பமிக்க தமிழ்மொழிக்கு கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியாக யூலை 19ந் திகதி தமிழ்மொழி தினத்தைக் கொண்டாடுகிறது. இதே வேளை தமிழ்மொழிக்கு அளப்பெரும் தொண்டாற்றிய பெரியார் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் மறைந்த தினமும் இங்கு நினைவு கூரப்படுகின்றது. அந்தவகையில் நடைபெறும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் பல்வேறு நிகழ்வுகளை அதாவது இயல், இசை , நாடகப்போட்டிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

மானிட வாழ்க்கையில் ஆக்கமும் அன்பும் அமைதியும் மகிழ்ச்சியும் பொருந்திய வாழ்க்கை அமைய கலையை அனுபவிக்க கற்றுக் கொள்ள வேண்டும் நாம் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் மற்றவர்களுக்கு மகிழ்வூட்டி அவர்கள் நமக்கு வேண்டியவர்களாக நம்மால் விருப்பம் உள்ளவர்களாக அமைத்துக் கொள்ளும் முயற்சியும் ஒரு கலைதான். இத்தகைய சிறப்பு மிகு கலைகளில் எமது மாணவர்களும் பங்குபற்ற வேண்டும். ஏனைய மானவர்களுடன் போட்டியில் முழுப்பயிற்சியுடன் பங்குபற்ற வேண்டும். வெற்றிப்படிகளில் நாமும் ஏறலாம். அந்தவகையில் எந்த நேரமும் எமது மாணவர்களுக்கு அறிவு புகட்டி அவர்களிற்குரிய பயிற்சியை சிறந்த ஆசிரியர்கள் மூலம் ஒழுங்குபடுத்தி மாணவர்களை பயிற்சியில் ஈடுபடுத்தி வெற்றி பெற வழிவகுத்த பெருமை எங்கள் ஓய்வு பெற்ற அதிபர் திரு. நா. இராஜநாதன் அவர்களிற்குரியதாகும்.

வருடந்தோறும் இடம்பெறும் தமிழ்மொழிதினப் போட்டியிலே பாடசாலைமட்டம், வலயமட்டம், மாகாணமட்டம், தேசியமட்டம் என நிகழ்வுகளுக்கான வெற்றிக்களங்கள் அமைக்கப்பட்டு போட்டிகள் யாவும் இடம்பெறுவது வழக்கம். இத்தகைய போட்டிகளில் ஆரம்பநிலையில் பாடசாலைப் மட்டப்போட்டிகளில் நிகழ்வுகள் யாவும் விறுவிறுப்புடன்இடம் பெறவும் அதற்கான மாலை நேரப் பயிற்சிக்கான ஒழுங்கமைப்பையும் , தமிழ்மொழித்தினப் போட்டிக்கு பொறுப்பாக ஆசிரியர்களை ஒழுங்கமைத்து அவர்கள் மூலம் செயற்பட வழிசமைத்து விடுவார். அதுமட்டுமன்றி அவ்வேளையில் மாலைநேரத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் பயிற்சியில் ஈடுபடும்போது அவர்களுக்கு பாதுகாப்பாக அதிபர் அவ்வேளை தனது காரியாலயத்தில் வந்து அமர்ந்து கொண்டு 3.00 மணி தொடக்கம் 6.30 மணி வரை காத்திருப்பதும் தனது பணிகளில் ஈடுபடுவதும் எம்மால் என்றும் மறக்கமுடியாத நினைவுகளாகும்.

எமது வித்தியாலயத்தைச் சார்ந்த மாணவர்கள் எவரும் சளைத்தவர்கள் அல்ல 'முயற்சி பலன் தரும்' என்றஅசையாத நம்பிக்கைப் பூக்களை அனைவரிடத்திலும் விதைத்தவர். அந்தவகையில் நம்பிக்கை என்பது வாழ்விற்கு அடித்தளம் நம்பிக்கை ஓர் உளப் பண்பு. நம்பிக்கை என்ற அகநிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாய் நன்மைகளே விளையும். நம்பிக்கை தொடக்க நிலை வாழிக்கையின் முதல் அடி அடுத்த அடி காரண காரியங்களை ஆய்வு செய்தல் ஒவ்வோர் அடியாகத்தான் நெடுந்தொலைவைக் கடக்க வேண்டும். நம்பிக்கை என்னும் முதல் காலை ஊன்றி வாழ்க்கை நடைப்பயணம் தொடங்குகிறது. அடுத்த அடி காரண காரயங்களை ஆய்வு செய்து தெளிவு பெறுதல் பின் தெளிந்த அறிவை தேர்ந்த அறிவாக்கல் அதனைத் தொர்ந்து முயற்சி தோன்றும் நம்பிக்கையும் முயற்சியும் ஒன்றையொன்று தழுவியன. இவற்றோடு தன்னம்பிக்கை கால் கொண்டவுடன் வாழ்வை உயர்த்தலுக்குரிய அனைத்து முயற்சிகளும் தலையெடுக்கும். நம்மால் முடியும் என்ற எண்ணத்தின் ஆற்றல் அளப்பெரியது. இத்தயை நிலைக்கு ஆசிரியர்களையும், மாணவர்களையும் அழைத்து வந்தவர், எங்கள் அதிபர். நா. இராஜநாதன் ஆவார். எமது பாடசாலை பலவழிகளிலும் சாதனை படைக்கவும் வெற்றிக் கிண்ணங்களைப் பெறவும், புகழ் பெறவும் காரண கர்த்தாவாக விளங்கினார் என்றால் மிகையாகாது. இந்த வழியிலே தமிழ்மொழிதினப் போட்டிகளில் இசை நிகழ்வு, பாவோதல் நிகழ்வு, இசையும் அசையும், குறு நாடக ஆக்க நிகழ்வு, வில்லுப்பாட்டு நிகழ்வு, காவடி நடன நிகழ்வு, நாட்டிய நடன நிகழ்வு போன்ற பல்வேறுபட்ட நிகழ்வுகளிலும் எமது மாணவர்களும் சளைக்காமல் பாடசாலை மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை விடாமுயற்சி செய்து வெற்றி பெற்றுள்ளனர். 2008ம் ஆண்டு எமது அதிபரின் தலைமையில் வில்லுப்பாட்டு, காவடி நடனம், நாட்டிய நாடகத்திற்கான மாகாணமட்டத்தில் பங்கு பெறுவதற்கான மட்டக்களப்பு, வாகரை வரையிலான பயணத்தில் 30 மாணவர்கள் பங்குபற்றினார்கள் என்பது குறிப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகவும் அமைந்துள்ளது. இப்பயணத்திலே அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 50 க்கு மேற்பட்டோர் பங்கு கொண்டு பயணம் செய்து மகிழ்ச்சியோடும், வெற்றிக்கிண்ணங்களோடும் வந்து சேர்ந்தனர். மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான தங்குமிட வசதிகளும், சுவையான உணவுகளும், பாதுகாப்பும் எமது அதிபர் வழங்கியதோடு மட்டுமன்றி எமது தமிழ்ப் பாரம்பரிய கலை நிகழ்வுகளையும் கண்டு கழிக்கவும் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகள் யாவும் என்றுமே மறக்க முடியாதவை ஆகும்.

ஒவ்வொரு வருடமும் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் தமிழ்மொழி தினப் போட்டிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகளின் ஆதாரங்களை ஒவ்வொரு வருடமும் எம்மால் வெளியிடப்படும் அச்சுதம் பரிசளிப்பு விழா மலரில் 2002-2009 வரையும் பார்வையிடலாம்.

உழைப்புக்கு என்றும் வெற்றியுண்டு. இம் முயற்சியில் ஈடுபட்டோர் யாவரும் நன்றிக்குரியவர்கள் என்றும் போற்றுதற்குரியவர்கள் எம்மோடு என்றும் தமிழ்மொழி தினங்களில் நின்று தோளோடு தோள் கொடுத்து உதவிய நன்கு அனுபவமிக்க வள ஆளார்கள், வழிகாட்டலில் ஆலோசணை வழங்கியோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் என்றும் எம் நன்றிக்குரியவர்கள்.

'எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'

என்றுமே எம் நெஞ்சங்களை விட்டு நீங்கா நினைவுகளாய், பதிவுகளாய் இவை அமையும் என்றும் அதன் காரணகர்த்தா வாழ்க வளமுடன் என்றும் வாழ்த்துகின்றோம்.

நன்றி

தமிழ்ப்பிரிவு
தி/விக்னேஸ்வர மகா வித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digital imaging & Printed by
SS DIGITAL PRINTERS
Specialist in Digital Colour Printing
#58, Vidyalayam Road, Trincomalee.
Con: 026-2224933, 0716415854 & ssdigitals.shan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org